www.akaram.eu

AKARAM

# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 8.9 திருவள்ளுவர் ஆண்டு 2051

14.02.2020 - 13.03.2020

ISSN : 2195-6480



FREE Magazine

# எங்களின் பாரம்பரியம் கண்டியின் சட்டம்

ரத்தன சார தேரர் பா.உ

## இது யாருடைய பாரம்பரியச் சட்டம்?

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA


TKS
BESTFOODS
Rheinische Strasse 79
44137 Dortmund
Mobile : 0151 25 300 400
fax: 0231/95046882
tel: 0 231/ 95046883
TKS
BEST FOODS
www.tks-bestfoods.de
info@tks-bestfoods.de
உங்களின் அன்றாட தேவைகளுக்கும்
உங்களின் வேண்டுகோளுக்குமிணங்க
தரம் என்ற தாரக மந்திரத்துடன்
நியாயமான விலைகளுடன்
பலசரக்குப்பொருட்கள்
மரக்கறி வகைகள் மற்றும்
மீன் வகைகள் எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்.

ortel MOBILE

TREUE + BONUS[2)]



WORLD FLAT

+ Unbegrenzte Minuten in 47 Länder

+ Deutschland Flat

+ Treuebonus: Ab dem zweiten Monat nur 19,99 €/28 Tage

**24 99 €**[1)] /28 Tage

# OHNE PAUSE NACH HAUSE.



*nur Festnetz

**Ortel. Wir sprechen Deine Sprache.**

Google play · Available on the App Store

**Aufladbar mit:** ortel MOBILE, O2, e-plus

Ortel Mobile GmbH, E-Plus-Straße 1, 40472 Düsseldorf. Nutzungsvoraussetzung: Erwerb eines Starterpaket (UVP 9,95 €). Standardtarif: Innerdeutsche Gespräche: 9 Cent/Min., Gespräche ins Ausland ab 1 Cent/Minute. Gespräche jeweils zzgl. einmaliger Verbindungsgebühr von max. 15 Cent je Gespräch möglich (alle Preise unter www.ortelmobile.de). SMS 15 Cent. 49 Cent/MB. 60/60 Taktung. Nicht gültig für Sonderrufnummern. Datengeschwindigkeiten innerhalb Deutschlands und in der EU von bis zu 21,6 MBit/s (Download) und 8,6 Mbit/s (Upload). Bei den angegebenen Geschwindigkeiten handelt es sich um die jeweils technisch mögliche Maximalgeschwindigkeit. Die tatsächlich erreichte Durchschnittsgeschwindigkeit kann davon abweichen. Taktung 100 KB Schritte. 1) World Flat (24,99€ pro 28 Tage Optionslaufzeit zubuchbar zum Standardtarif): Unbegrenzte Minuten aus Deutschland in die EU, sowie Gespräche aus Deutschland in alle Netze von Bangladesch, Brasilien, Chile, China, Hongkong, Indien, Indonesien, Japan, Kanada, Malaysia, Puerto Rico, Singapur, Südkorea, Thailand, USA sowie in die Festnetze von Kasachstan, Russland, Slowenien. Dazu eine Flatrate für Gespräche in alle deutschen Netze. Dies gilt auch für Telefonate innerhalb der EU und aus der EU nach Deutschland. 60/60 Taktung. Nicht gültig für Sonderrufnummern. Außerhalb der Inklusivleistung gelten die üblichen Konditionen Ihres Tarifs. Die Verlängerung erfolgt bei ausreichendem Guthaben automatisch, wenn die Option nicht zum Ende der jeweiligen Laufzeit gekündigt wird. 2) Verlängerung 19,99 €/28 Tage.




AKARAM
அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine

14 - மாசி 2020 13 - பங்குனி 2020
சுவடி / ISSUE 8.9



**தலைமை ஆசிரியர்**
திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**
திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)

**நிழற்படப் பிரிவு**
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**
திரு. அர்ஜுன் (ஜெர்மனி)



**தொடர்புகளுக்கு**

**European Tamils Union e.V.**
**PO. BOX 4153, 59037 Hamm**
**Germany**

**Tel: 00 49 176 47 11 87 11**

Email: editor@akaram.eu



ISSN 2195-6480

www.akaram.eu



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.


## நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும், விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும் பணிவான வணக்கம்.**

# நாடு போகிற போக்கில் இன்னும் என்னவெல்லாம் நடக்குமோ.. யார் அறிவார்?

புதிய ஜனாதிபதி கோட்டபாயா ராஜபக்ச வெகு வேகமாக ஊழல் மிக்க சர்வாதிகாரியாக தம்மைக் கட்டமைத்து வருவதை, அவரது அரச மற்றும் கூட்டுத்தாபனங்களில் அதி உயர் பதவிகள் நியமனங்கள் மூலம் வெளிப்படுத்தி வருகிறார். அடுத்து, படை அதிகாரிகளைத் தம்மைச் சுற்றிலும் அதிகாரிகளாக நியமித்து, ஒரு இராணுவக் கட்டமைப்பை உருவாக்கி வருவதன் மூலம் அவரது நோக்கம் தெளிவாகிறது.

மாகாணங்கள் தோறும் படைக்களக் கட்டமைப்புகளை நிறுவியதன் மூலம் நாட்டின் எந்த மூலையிலும் தமக்கான எதிர்ப்பை எழாமல் தடுக்கும் எண்ணம் தெரிகிறது.

அடுத்து, சட்டரீதியாகத் தமது இடத்தை உறுதிப்படுத்த புதிய அரசமைப்புச் சட்டம் வேண்டும் என்கிறார். அதற்காக விரைவில் பொதுத் தேர்தலை நடத்தலாம் எனச் செய்திகள் வருகின்றன.

அவருக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வந்து விடாமல் செய்ய அவரது அரசியல் எதிரிகள் வரிந்து கட்டி வருகின்றனர். ஆனால் ரணிலுக்குப் பிரதமர் பதவி ஆசை கொடுத்து, அவர் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியில் பிளவை ஏற்படுத்தி, தேர்தல் மூலம் தேவையான பெரும்பான்மை பலத்தை அடைவது அல்லது பயத்தாலும், நயத்தாலும், பணத்தாலும் உறுப்பினரை சேர்த்து விடலாம்

எனவும் பேசப்படுகிறது. எப்படியும் அவர் நினைத்ததைச் சாதித்து விடுவார் என்கிற பயம் பலருக்கும் உள்ளது.

சினிமா நடிகரும் அரசியல்வாதியுமான ரஞ்ஜன் ராமநாயக்காவிடமிருந்து காவல் துறையால் கைப்பற்றப் பட்ட அரசியல்வாதிகள், காவல்துறை மற்றும் நீதிபதிகள் உள்ளிட்ட உயர் தட்டுப் பிரபலங்களின் தொலைபேசி உரையாடல்களின் பதிவுகள் நாட்டின்



ஊழல், இலஞ்சம், பெண்கள் பாலியல் குற்றங்கள் என்பன மிகப் பெரிய அளவில் இருப்பது அம்பலமாகி, நாட்டின் சட்டம் ஒழுங்கு, நீதித் துறையின் சீர்கேடுகள் உலக அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தி விட்டன.

120,000 பதிவுகள் பிடிபட்டன. இன்னும் பல பதிவுகள் பாதுகாப்பாக வெளிநாடுகளில் வைத்திருப்பதாக பாராளுமன்றத்தில் ராமநாயக்கா தெரிவித்துள்ளார். இவை எல்லாம் ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தின் இல.30.1 பிரேரணைக்கமைய அரசுக்கு சிக்கலைத் தரும் எனவும் கருத்துகள் நிலவுகின்றன.

நாடு போகிற போக்கில் இன்னும் என்னவெல்லாம் நடக்குமோ யார் அறிவார்? மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை அனைவருக்கும் அனைத்து நலங்களும் வேண்டி விடைபெறும்,

**ஆசிரியர், அகரம் குழுமம்**


NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE

நீங்கள் ஒரு முக்கிய நிகழ்வை சிறப்பாகக் கொண்டாடப் போகின்றீர்களா? பிறந்தநாள் விழா, திருமண விழா போன்றவைகளா? நாங்கள் உங்கள் விருப்பங்கள் மற்றும் எண்ணங்களுக்கு அமைவாக இலங்கை மற்றும் இந்திய உணவு வகைகளை அந்த நாட்டு முறைப்படி தயாரித்து வழங்குகிறோம்!

உங்களுக்கு உதவி தேவைப்படுகின்றதா? எவ்வித சிரமமும் இன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளனர்!




திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள்!

நிழல்படம் மற்றும் வீடியோ!

விநியோகம் மற்றும் பரிமாற்றம்!

Kontakt: Siemensstr. 25, 40721 Hilden





Rufen Sie uns an:
Tel.: 0211/7691974 | Mobile: 0173/7424955

த. எதிர்மன்னசிங்கம்



# புதிய தலைவர்! புதிய தலை இடி! புதிய சர்வாதிகாரத்தில் இலங்கைத் தமிழர்கள்!

## கண்டிய சட்டங்கள்தான் எங்களின் பாரம்பரியம் றோமன் டச்சு சட்டங்கள் அல்ல

2020 ஜனவரி 03ம் திகதி இலங்கையின் நிறைவேற்று அதிபராகப் பதவி ஏற்றுக் கொண்ட, மிக முக்கியமான அறிவித்தலாக இலங்கையின் அரசமைப்புச் சட்டம் மாற்றப்படும் என அதி உத்தமர் கோட்ட பாயா இராஜபக்ச வின் கூற்று இருந்தது.

இந்த அறிவித்தலானது 2015ல் ஆட்சிக்கு வந்த மைத்திரிபால சிறிசேனா , ரணில் விக்கிரம சிங்க ,சந்திரிகா குமாரதுங்க .சம்பந்தன் , சுமந்திரன் கூட்டம் கூடிக் கும்மி அடித்து கொண்டு வந்த ‘நல்லாட்சி’ என்ற நல்ல பாம்பு அரசுத் தலைவர் வசம் இருந்த சில அதிகாரங்களைப் பறித்து, அவற்றை பாராளுமன்றத்துக்கும், பிரதமருக்கும் அதிக அதிகாரங்களை வழங்கி மடை திருப்பியது.

இந்த நல்லாட்சி இந்தியாவின் தலைமையில் மேற்குலக நாடுகளால் இலங்கையில் பெருகி விட்ட சீன ஆக்கரமிப்பை திசை திருப்பி, இந்தியா மேற்கு நாடுகளின் பக்கம் இலங்கை அரசை மடை மாற்றவே கொண்டு வரப்பட்டது. ஆனால், இந்த உண்மையை மறைத்து, தமிழ் மக்களின் வாக்குப் பலத்துடன் மகிந்தரை தோற்கடிக்க மகிந்தரின் கூட்டாளி மைத்திரியை அரச அதிபர் ஆக்குவதற்கு, தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்கவும், தமிழ் இனப் படுகொலைக்கே துணை நின்ற த.தே.கூ. சம்பந்தன்,



சுமந்திரன் கும்பல் இந்தியாவின் இந்தச் சதியிலும் துணை போயினர்.

இந்த முயற்சியால் மைத்திரி ரணில் மற்றும் பௌத்த சிங்கள மதவாத சக்திகளை தமிழ் மக்களின் வாக்குப் பலத்தை பயன்படுத்தி, மீண்டும் ஒரு சதிப் புரட்சியை இந்த நாடுகள் அரங்கேற்றின. அதற்கு ஒத்திசைவாக மீண்டும் ஒரு இனப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வு அடங்கிய அரசமைப்பு திருத்தச் சட்டம் எனப்படும் மாய மானை உருவாக்கி, அதன் பின்னால் தமிழர் தலைமையை தொடர்ந்து விரட்டி, முடிவில் சிங்கள மக்களுக்கு மட்டுமே நன்மை தேடிக் கொடுத்ததோடு, சிங்களத் தலைமைகள் கதையை முடித்தன.

இந்த நல்லாட்சி தமிழரின் உடனடிப் பிரச்சனைகளான தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, தமிழரின் வீடுகள், விளைநிலங்களை இராணுவத்திடம் இருந்து மீட்டு, இடம் பெயர்ந்த தமிழ் மக்களின் மீள் குடியேற்றம் போன்ற அவசரக் கோரிக்கைகளைக் கூட அரசு நிறைவேற்றத் தவறியதோடு, அவற்றுக்கான நிரந்தரத் தீர்வாக அரசமைப்புச் சட்டத் திருத்தம் கிடைத்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பயன்படுத்தி செய்து கொடுக்கப் படும் என்ற ஆசை காட்டி காலத்தைக் கடத்தியது.

ஆனால் பிரதமர் ரணிலும், அதிபர் மைத்திரியும் தமது உறவினர், நண்பர்களின் குற்றச் செயல்களை சிறைத் தண்டனைகளை நீக்கியும், அவர்களுக்கு உயர் அரச பதவிகளை வழங்கியும் குஷிப் படுத்திக் கொண்டனர்.

ஐ.நா. மனித உரிமை ஆணைய அமர்வுகளில் போர்க் குற்ற விசாரணைகள் தொடர்பான விவாதங்கள் இடம் பெறாமலும், அரசே கொடுத்த வாக்குறுதிகளையும் இணைந்து நிறைவேற்றிய 30-1 தீர்மானங்களை நிறைவேற்றாமலும் தப்பித்துக் கொள்ள, அரசுக்கு இரண்டு தடவைகள் தலா இரண்டு வருட கால நீட்டிப்பை சம்பந்தன், சுமந்திரன் தலைமையிலான தமிழர் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக் கொடுத்ததன் மூலம், அரசின் ஏமாற்ற வேலைகளைச் சுலபமாக முடித்துக் கொடுத்தது.

தமிழினப் படு கொலையாளிகளை போர்க் குற்ற விசாரணைகளில் இருந்து தப்பிக்க வைத்தமைக்காக, சிங்களத் தலைவர்களே சம்பந்தன் கும்பலுக்கு நன்றி


**Dortmund மாநகரில்....**

# தமிழர் அரங்கம் கல்விக் கூடம்




**யேர்மன் மொழி வகுப்புகள்**

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



**Nachhilfe வகுப்புகள்**

பாடசாலை மாணவர்களுக்கானது



**தமிழ் மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33, 0231 950 979 00**

சொன்ன செய்திகளையும், தமிழினம் படிக்க வைத்த பெருமை தமிழர் தலைமைக்கே உரியது. நடந்து முடிந்த அரச அதிபர் தேர்தலில் தமிழ் மக்களைச் சரியான அரசியல் பாதையில் வழி நடத்தாமல், வழ வழா அறிக்கைகள் மூலம் தப்பித்துக் கொண்டது.

புதிதாகத் தெரிவான அதிபர் கோட்டபாயா "பெரும்பான்மையான சிங்கள மக்களின் விருப்பப்படியே தமது ஆட்சி இருக்கும்" என இந்தியாவில் பிரதமர் மோடியைச் சந்தித்த பின்னர் பகிரங்கமாக அறிவித்தும் விட்டார்.

பதவிக்கு வந்த பின்னர் அதிபர் கோட்ட பாயா செய்த முதல் வேலை, எல்லா மாகாணங்களிலும் இலங்கையின் படைப் பிரிவுகளை நிறுவுதல் என செய்தும் விட்டார். ஒப்புக்கு எல்லா மாகாணங்கள் என கூறினாலும், தமிழ் பகுதிகளே கடுமையான நெருகடிகளைக் காணும் என்பதே உண்மை. உலக நாடுகளில் போர்க் குற்றவாளிகளாகக் கருதப்படும் அனைத்து சிங்கள இராணுவ அதிகாரிகளும், இலங்கையின் உயர் அரச பதவிகளில் அமர்த்தப்பட்டு வருகிறார்கள்.

அதிபராகத் தெரிவான கோட்ட பாயாவே போர் குற்றங்கள், சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரம துங்க கொலை மற்றும் சர்வ தேச சட்டத்துக்குப் புறம்பான கைதுகள், சித்திரவதை, மனித உரிமை மீறல் தொடர்பான நீதி அமைப்பின் தலைவி யஸ்மின் சூக்கா தொடர்ந்த வழக்குகளில் இருந்து தப்பிக்கவே அரச அதிபர் தேர்தலை கையில் எடுத்தார். எனவே, "என்றோ ஒரு நாள் அவர் பதவி இழக்கும்பொழுது அவர் நீதியின் முன் நிறுத்தப் படுவார் " என்கிறார் யஸ்மின் சூக்கா. இருப்பினும் கோட்ட பாயா சிறிதும் அச்சமின்றி, தனது சர்வாதிகாரப் போக்கில் வேகமாகச் செயற்பட்டு வருகிறார்.

அடுத்து அவர் கொண்டு வரப்போகும் புதிய அரசமைப்பு எத்தன்மையதாய் இருக்கும் என்பதற்கு அடையாளமாக, அவர் எல்லா முக்கிய அரச பதவிகளிலும் தமது உறவினர்களையும், உறவினரின் உறவினரையும் தாராளமாக அரச பதவிகள் வழங்கி, ஒரு பெரும் ஆதரவுத் தளத்தையே தம்மைச் சுற்றிலும் கட்டமைத்து வருகிறார். அவர்களும் அவரை விட வேகமாக ஊழல்களையும், சட்ட மீறல்களையும் தங்கு தடையின்றி செய்து வருகின்றனர்.

இவர் தமது இரண்டு கலிபோனிய நண்பர்களையும், இரண்டு இராணுவ அதிகாரிகளையும் அரசபதவிகள் வழங்கி மகிழும் காட்சியைப் படம் காண்பிக்கிறது. **இடமிருந்து வலமாக ராஜா எதிரிசூரிய. இவர் பிரேசில் நாட்டு இலங்கைத் தூதரகத்துக்கு வாங்கிய கட்டிட கொள்வனவில் ரூபா.1.4 மில்லியனைக் கையாடல் செய்தவர். அதனால் கடந்த ஆட்சியின் பொழுது நாட்டுக்குள் வராமல் தவிர்த்துக் கொண்டார். அவருக்கு அரச பெரி இயல் கூட்டுத் தாபனத்தின் தலைவர் பதவியை கோட்டா கொடுத்துக் கௌரவித்துள்ளார்.**

இரண்டாவதாக நிற்பவர் இராணுவக் கேணல் சரத் சந்திரா. நான்காவதாகக் காணப்படுபவர் உபுல் தர்மதாசா சிவில் விமான அதிகார சபைத் தலைவர் பதவி இவருக்கு. ஐந்தாவதாக நிற்பவர் மல்ராஜ் டி சில்வா. அவர் ஐக்கிய அரபுக் குடியரசின் இலங்கைத் தூதராக நியமிக்கப் பட்டுள்ளார். மல்ராஜ் டி சில்வாவும், உபுல் தர்மதாசாவும்



A K M M

Alpenstr.1, 3072 Ostermundigen
Tel. 031 9312525 (Bern Nilavani)
Basel Str. 80, 6003 Luzern
Tel. 041 2405400

# மலிவு எங்கும் கிடைக்கும் தரத்துடன் கூடிய இலாபம்..!

## தமிழனின் வரலாற்றில் மாபெரும் புரட்சி

இதய பூமியாம்
கிளிநொச்சியை மையமாகக் கொண்டு
தமிழரின் உழைப்பில் உற்பத்தியானது






உங்கள்
இனத்துக்கு உதவிய
திருப்தியுடன்
வாங்கிச்
செல்லுங்கள்!



A K M M

முத்திரை பதித்த
அனைத்துப் பொருட்களையும்
ஒருமுறைச் சுவைத்தால்
ஈழத்துச் சுவை உங்கள் நாவில்
ஆழமான தனிச் சுவை தரும்..!

கிளிநொச்சி / முல்லைத் தீவு / யாழ்
மன்னார் மாவட்டங்களில் இருந்து
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளிலும்
ஒரு தமிழனின் துயர் துடைக்கும்

**“விலை அல்ல** எம் வாழ்வில் மகிழ்வைத் தருவது
**தரம் மட்டுமே!** நல் வாழ்வைத் தரும்

AKM Mani Face book page : AKM

கலிபோனியாவில் வசிக்கிறார்கள். கோட்ட பாயாவே ஒரு அமெரிக்கப் பிரஜை.

அகப்பை பிடிப்பவர்களே அமெரிக்கப் பிரஜை என்றால், அமெரிக்கா அடிப்பந்தியில் இருந்தால் என்ன? நுனிப் பந்தியில் இருந்தால் என்ன? உபசரிப்பில் அமெரிக்காவுக்குத்தான் முதல் இடம். இதை அறியாத இந்தியா, தேர்தல் முடிவுகள் வெளியாகும் முன்னரே தனது வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை அனுப்பி, கோட்டபாயாவை புது டில்லிக்கு அழைத்து, சிவப்புக் கம்பள வரவேற்பளித்து குளிர வைத்த பின்னரும், கோத்தபாயா தனது பெரும்பான்மை (பௌத்த சிங்கள)மக்களின் விருப்பப் படியே ஆட்சி நடக்கும் என அறிவித்து, இந்தியாவின் மூக்கை உடைத்து விட்டு நாடு திரும்பி, தமது எண்ணப்படி நடந்து கொள்கிறார்.

அவர் தமிழருக்கு நன்மை செய்வதாகக் காட்டிக் கொள்ளக் கூடியதாக இருந்தது, வட மாகாண ஆளுநராக ஒரு தமிழ்ப் பெண் சிவில் சேவை உறுப்பினரான திருமதி .சாள்ஸ் அவர்களை நியமனம் செய்ததைச் சொல்லலாம்.

**ஆனால் பிள்ளையார் பிடிக்க,**




**குரங்கு வந்ததைப் போல அவரே யாழ் மாநகர சபைக்கு இணைப் பதிகாரியாக ஒரு சிங்கள கேணல் தர அதிகாரியை நியமித்திருப்பதானது வழக்கம் போலச் சிங்களம் தமிழனை வைத்துத் தமிழனை அடிக்கும் வேலையைத்தான் கோட்ட பாயாவும் செய்கிறார் என்பது உறுதியாகியது.**

கோட்ட பாயாவின் மேலும் இரண்டு பெண் ஆளுநர்களின் நியமனமும் சிக்கலை உருவாக்கும் வகையில் உள்ளன. மேல் மாகாண ஆளுநராக நியமிக்கப் பட்ட வைத்திய கலாநிதி சீதா அரம்பொல அரசமைப்புச் சட்ட விதிகளை மீறிப் பணம் சம்பாதிக்க, தனியார் மருத்துவமனைகளில் பகுதி நேர வேலை செய்கிறார் என்கிற முறைப்பாடு எழுந்துள்ளது.

இவரைப் போன்றே கிழக்கு மாகாண ஆளுநர் பதவி பெற்ற மற்றொரு பெண்ணான அனுராதா யகம்பத் தொடர்ந்தும் கைத்தறி நிறுவனம் ஒன்றின் இயக்குநர் பதவியில் இருக்கிறார். இவை நாட்டில் சட்டங்கள் எந்த அளவுக்கு உயர் மட்டத்தில் உள்ளவர்களால் மீறப்படுகின்றன என்பதற்கு வெறும் கொசுறுகளே.

**ஆயினும் புதிய அதிபரின் பல உயர் அரச நியமனங்கள் மூக்கின் மேல் விரலை வைக்கும் அளவுக்கு பிரமிக்க வைக்கின்றன.கல்வித் தகமைகள் பற்றிய கவலைகளே இல்லாமல் உறவினர்கள், அவர்களின் உறவினர்கள், நண்பர்கள் அவர்களின் நண்பர்கள், மனைவிமார், அவர்களின் தோழிகள், பெண் கொடுத்த, பெண் எடுத்த சம்பந்திகள் என வஞ்சக மில்லாமல் எல்லாருக்கும் அரச**







**நிறுவனங்கள் கூட்டுத் தாபனங்களில் அதி உயர் பதவிகளும், பல கோடி ரூபாய்கள் பெறுமான சலுகைகளும் வாரி வழங்குவதை திரு கோட்டபாயா தமது அன்றாடப் பணிகளாகக் கொண்டுள்ளார்.**

இந்த நிலையில் சிங்களச் சினிமா நடிகரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு.ராமநாயக்கா வீட்டைச் சோதனை இட்ட காவல் துறை, கைப்பற்றிய உயர் அரச பதவிகளில் உள்ளவர்களின் இரகசியங்கள் அடங்கிய தொலைபேசி உரையாடல்களின் பதிவுகள் மிகப் பெரும் அதிர்வு அலைகளை எழுப்பி விட்டுள்ளன.

இவரிடம் இருந்து 120,000க்கும் அதிகமான இரகசிய தொலைபேசி உரையாடல் பதிவுகள் கிடைத்துள்ளன. இவற்றுள் மிகச் சிலவே வெளிவந்துள்ளன. அவற்றுள்ளே நீதி அரசர்கள், உயர் அரச அதிகாரிகள், புலனாய்வுத் துறையினர் எனப் பல்வேறு தரப்பினரும் சிக்கி உள்ளமை சிறப்பு அம்சமாகும்.

இவற்றில் பெண்கள் தொடர்பான கச முசாக்களும், பல பெரிய பிரபலங்களைச் சுற்றியப் பதிவுகள் வெளிப்படுத்தி உள்ளன. பின்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றிய ராமநாயக்கா வெளிவராத இன்னும் பலப் பதிவுகள் பாதுகாப்பாக வெளிநாடுகளில் வைத்திருப்பதாகக் கூறியதன் மூலம் பீதியைக் கிளப்பி விட்டிருக்கிறார்.

இப்பதிவுகளால் போர் தொடர்பான குற்றங்களும் வெளிப்பட்டு, அவை சாட்சியங்களாக சர்வதேச விசாரணைகளில் பயன்படுத்தப்படக் கூடிய ஆபத்துகளும் இருப்பதாக ஆய்வாளர்கள் கருத்துகள் வெளியிட்டு வருகின்றனர்.

ஆனால் இவை புதிய ஜனாதிபதியின் செயற்பாடுகளில் எந்த வித மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. அவருடைய புதிய அரசமைப்பு சிங்கள பவுத்த பேரினவாத ஆட்சியாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.



இன்னொரு பாராளுமன்ற உறுப்பினரான எப்படியாக இருக்கும் என்பதற்கு அச்சாரமாக புதிய அரசமைப்பு கண்டிச் சட்டங்கள் ஒன்றையே நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவான சட்டமாக இருக்க வேண்டும் என்கிறார் பாராளுமன்ற உறுப்பினர்

இந்தியாவின் காலைப் பிடித்து குறைந்த பட்சம் வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண சபைக்கு காணிகள் காவல்துறை அதிகாரங்களைப் பெற்று விடலாம் எனப் பேசிவந்த அரசியல் தற்குறிகளின் முகங்களில் அசடு வழிவதுதான் கண்ட பலன். அடுத்து என்ன செய்வதெனத் தெரியாமல் சம்பந்தன் பேச்சு மூச்சற்று கொழும்பிலே கிடக்கிறார்.

சுமந்திரன் மட்டும் அடுத்த தமிழினத் தலைவன் என்கிற கனவில் பிதற்றித் திரிவதோடு, தமிழரசுக் கட்சித் தலைமைக்கும் குறிவைப்பதாக செய்திகள் வருகின்றன. சாவு வீட்டில் பிணத்தைப் பற்றிக் கவலைப் படாமல், சொத்துப் பங்குச் சண்டைநடப்பது போல தமிழரசுக் கட்சித் தலைமைப் பதவிக்கு சி.வி.கே.சிவஞானமா?, சுமந்திரனா?, மாவையா ? வேறு யார் யாரோ அடித்துக் கொள்ள ஒருவரின் குரல் மட்டும் சுதியும் சுவரமும் மாறாமல் ஒலிக்கிறது.

அதுதான் கடமை மாறாத கடுமை குறையாத சிவாஜிலிங்கத்தின் உரிமைக் குரல். "சிங்கள ஆட்சியாளரை முடிந்தால் அமெரிக்கா செய்தது போல, மனித உரிமை ஆணைச் சபையிலிருந்து விலகிப் பாருங்கள். அப்புறம் தெரியவரும் உங்களின் வண்டவாளங்கள். தமிழருக்கு ஐ.நா. மூலமான தீர்வு ஒன்றுதான் தீர்வாக இருக்க முடியம்" என்கிற அவரது முழக்கத்தை உலகம் எங்கும் உள்ள தமிழர்கள் எழுப்பவார்கள் என எச்சரிக்கிறார்.

சிவாஜி லிங்கத்தை ஒரு அரசியல் கோமாளியாகப் பார்ப்பவர்களுக்கு, அவரது பேச்சு அர்த்தமற்றதாகப் படலாம். ஆனால் கோத்த பாயாவின் ஆட்சி தமிழ் மக்களை அப்படித்தான் மாற்றப் போகிறது.

ஆனால் அரச படைகள் இறுதிக் கட்ட மோதல்களின் பொழுது இழைத்த மனித உரிமைகள் மீறல்கள், குற்றங்கள் வரலாற்றில் இடம் பெற்ற மிக மோசமான மனித உரிமை மீறல்களாகக் கருதப்படுகிறது. அரச படைகள் திட்டமிட்ட வகையில் பொதுமக்களின்





வாடிக்கையாளர்களின் பேராதரவுடன்
18ஆம் ஆண்டில்....
4வார தொடர்
சிறப்பு அதிரடித்
தள்ளுபடி
விற்பனை
SK
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
யாரும் கண்டிராத
மலிவு விலையில்
இந்த வருடத்தின் புத்தாடைகள்
வாங்கிட எம்மை நாடவும்...
மாபெரும்
ராஜ
முத்திரை
ADLER STR. 33, 44137 DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648

கண்களைக் கட்டிச் சுட்டுக் கொள்வது போன்ற கைத் தொலைபேசிக் காட்சிகளின் பதிவுகள் :

அரசால் அறிவிக்கப்பட்ட 'தாக்குதல் அற்ற' பகுதிகளை குறிவைத்து, கனரக ஆட்டிலறித் தொடர் தாக்குதல்களால் 70,000 வரையான பெரும்பாலும் அப்பாவித் தமிழ் பொதுமக்கள் கொல்லப் பட்டனர் என ஐ.நா. கூறுகிறது. மனித உரிமைக் காவல் அமைப்பு மோதல் நிறுத்தப்பட்ட பின்னரும், தமிழ் செயற் பாட்டாளர்களும் தொடர்ச்சியான காணாமல் போவதும், ஊடகர்களும் காணாமல் போவதும், துன்புறுத்தல்கள் என்பன பதிவாகி உள்ளன.

போரின் பொழுது மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுகளுக்கு உள்ளான அரச தரப்பினருக்கு பாதுகாப்பு வழங்கப் புதிய சட்டங்களை திரு.ராஜபக்ஷ இயற்ற நடவடிக்கைகளை எடுப்பதாக உள்ளூர் ஊடகங்கள் இன்று கூறுகின்றன.

அவர்கள் பொறுப்புக் கூற வைக்கப்பட வேண்டும் எனத் தமிழ் செயற்பாட்டாளர்கள் சொல்கிறார்கள். ஆனால் அப்படிச் செய்வது உள்நாட்டுப் போருக்குப் பின்னரான அமைதிப் பணிகளுக்கு ஊறு ஏற்படுத்தும் என்கிறார் திரு.ராஜபக்ஷ.

திரு. ராஜபக்ஷவின் கடுமையான செயற்பாடுகள்தான் இறுதியில் போரை முடிவுக்கு கொண்டு வந்ததால் பெரும்பான்மையான பவுத்த சிங்களவர்கள் அவரைப் பெருந் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய புகழின் உச்சத்தில் தான் கடந்த நவம்பரில் அவர் இலங்கையின் புதிய அதிபராகத் தெரிவானார். அவரது அடுத்த இலக்கு தமது கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும் பான்மையைப் பெற்று தனித்த அரசை அமைப்பதே!. அதற்கு இப்பொழுது ரணிலின் ஆதரவு உள்ளது. அதன் மூலம் ரணிலுக்கு பிரதமர் பதவியாம். அப்படியானால் மகிந்தரின் நிலை என்வாகும்? பதிலைக் காலம் சொல்லட்டும்.





LIMRA BAGS PVT. LTD.
No.14A, Pensioner st, Tennur, Trichy - 620 017, TAMILNADU INDIA.
www.limrabags.in | 97861 14635 | 1800 121 123455
Lezer
For everyone of the world
Managing Director
Sadik Basha. M
தமிழ் இலக்கிய ஆர்வலர்

one
DISTRIBUTION

**Rheinische Str. 70 44137 Dortmund**

T 0231 330 16 114 ✉ V-ONE@outlook.de

Handy Verträge ab 1,- €
Handy Zubehör
Handys
Handy Reparatur
Festnetz DSL
Prepaid SIM
Prepaid Guthaben

KFZ Gutachten
Passbilder
Event Fotos& Videos

Privat Kredit

Handy Versicherung
KFZ Versicherung
Haftplicht Versicherung
und vieles mehr...

vodafone
YUPPTV
ay yıldız
dpd Pickup
FLiXBUS
Lyca mobile Call the world for less
Lyca TV
WESTERN UNION WU moving money for better
MoneyGram.
unitymedia
KFZ-SACHVERSTÄNDIGER AMBERG
1&1
BLACK DIAMOND
ortel MOBILE
Ria Money Transfer
LEBARA
yourfone
T · · Mobile ·
O2
otelo



பூமிபுத்திரன்

# லிபியாவில் சமாதானம் திரும்புமா?

ஆப்பிரிக்கக் கண்டத்தின் வளம்மிக்க நாடாகத் திகழ்ந்த லிபியாவில் தற்போது நடைபெற்றுவரும் உள்நாட்டு யுத்தம் முடிவிற்கு வரக் கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன. 2020ஆம் ஆண்டில் உலக அரங்கில் இருந்து வெளிவரும் முதல் நல்ல சேதியாக இது அமைந்துள்ளது. ஜனவரி 19இல் ஜெர்மன் தலைநகர் பேர்லினில் நடைபெற்ற பல தரப்பு மகாநாடு, இதற்கான சமிக்ஞைகளைத் தந்து நிற்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையோடு ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மகாநாட்டில் லிபியாவில் மோதலில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்பின் தலைவர்களும் கலந்து கொண்டனர். ஐ.நா.சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் தலைமை அமைச்சரான பயஸ் அ-சராஜ், மற்றும் லிபிய தேசிய இராணுவத்தின் தளபதியான ஜெனரல் கலீபா ஹாப்ரர் ஆகியோர் இந்த மகாநாட்டில் சமூகம் தந்திருந்த போதிலும், அவர்கள் இருவரும் நேருக்கு நேர் சந்தித்துக் கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப் படுகின்றது. இவர்கள் இருவருக்கும் இடையிலான கருத்துப் பரிமாறல்களையும், யேர்மன் அரசுத் தலைவி அங்கெலா மேர்க்கல் அவர்களே முன்னின்று நடாத்தினார்.

ஐ.நா. பொதுச் செயலாளர் அன்ரோனியோ குரேறஸ் அவர்களுடன் ரஸ்ய அரசுத் தலைவர் விளாடிமிர் புட்டின், பிரான்ஸ் அரசுத் தலைவர் இம்மானுவேல் மக்றோன், பிரித்தானியத் தலைமை அமைச்சர் போரிஸ்





ஜோன்சன், துருக்கி அரச அதிபர் எர்டோகான், இத்தாலியத் தலைமை அமைச்சர் குஸ்ஸெப்பே கொன்ரே, கொங்கோ குடியரசுத் தலைவர் டெனிஸ் சாசு என்குஸ்ஸோ ஆகியோர் உட்பட அமெரிக்கா, சீனா, எகிப்து, அல்ஜீரியா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும், பன்னாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

இந்த மகாநாடு நடப்பதற்கு ஒரு வாரம் முன்னதாக ரஸ்யாவில், லிபிய மோதலில் ஈடுபடும் இரண்டு தரப்புப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஒரு சமாதான மகாநாடு ரஸ்யா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளின் முன்முனைப்பில் நடைபெற்றது. குறித்த மகாநாட்டில் இரண்டு தரப்புக்கும் இடையே ஒப்பந்தம் எதுவும் எட்டப்படாத போதிலும், பேர்லின் மகாநாட்டில் ஒரு ஒப்பந்தம் உருவாவதற்கான ஏது நிலைக்கு ரஸ்ய மகாநாடே காரணம் என நம்பப் படுகின்றது.

பேர்லின் மகாநாட்டிற்கு முன்னதாகவே யனவரி 12இல் லிபியாவில் ஒரு போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இந்தப் போர் நிறுத்தம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனவும், லிபியா மீதான போர்த் தளபாடத் தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனவும் இந்த மகாநாட்டில் இணக்கம் காணப்பட்டுள்ளது. அதேவேளை, அன்றாடம் எழக் கூடிய பிரச்சனைகளைப் பேசித் தீர்ப்பதற்கும், எதிர்காலச் செயற்பாடுகளுக்குமாக தலா 5 பேர் கொண்ட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டு உள்ளது.

அரபு நாடுகளில் ஏற்பட்ட 'ஜனநாயக வசந்தம்' என்ற தலைப்பிலான மக்கள் எழுச்சியின் தொடர்ச்சியாகவே லிபியாவில் அரசுத் தலைவர் கேணல் கடாபிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் உருவாகின. கேணல் கடாபியை எப்படியாவது ஒழித்துக் கட்ட வேண்டும் எனத் தருணம் பார்த்திருந்த






அமெரிக்க ஏகாதிபத்தியம், இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டது. ஐ.நா.வின் உதவியுடன் நேட்டோவைத் துணைக்கு வைத்துக் கொண்டு அமெரிக்கா உருவாக்கிய இராணுவக் குழுக்கள் கேணல் கடாபியைக் கொலை செய்தது மட்டுமன்றி, லிபியாவையும் துண்டு போட்டுக் கொண்டன.

பராக் ஒபாமா அமெரிக்க அரசுத் தலைவராக இருந்த காலகட்டத்திலேயே இந்தச் சம்பவங்கள் நடந்தேறின. "லிபியத் தலையீடு ஒரு சரியான முடிவு" எனக் கூறிய ஒபாமா, ஒரு சில வருட இடைவெளியில் "தனது பதவிக் காலத்தில் நிகழ்ந்த மிக மோசமான தவறு லிபியத் தலையீடு" என ஒத்துக் கொண்டார். 'கேணல் கடாபி கொல்லப்பட்டதன் பின்னான சூழலை தனது நிர்வாகம் கையாண்ட விதம் தவறானது' என்பது அவரது நிலைப்பாடு.

ஆனால், தவறை உணர்ந்து கொள்ளும் போதோ லிபியாவில் அனைத்துமே எல்லை கடந்த நிலைக்குச் சென்று விட்டது. அல் கைதா தீவிரவாதிகளின் செல்வாக்கு அதிகரித்த நிலை, போட்டி இராணுவக் குழுக்கள் இடையேயான ஆயுத மோதல்கள், ஆப்பிரிக்கக் கண்டத்தில் இருந்து மேற்கொள்ளப்படும் ஆட் கடத்தல்களின் கேந்திர நிலையமாக மாறிய லிபியா, அதன் நீட்சியாக இடம்பெறும் அடிமை வர்த்தகம் என ஒரு காலத்தில் வளம் கொழிக்கும் நாடாக இருந்த லிபியா, மனிதர் வாழ்வதற்கு ஏற்றதல்லாத நரகமாக மாறிப் போனது.

இத்தகைய பின்னணியிலேயே ஜெனரல் கலீபா ஹாப்ரரின் வகிபாகம் முக்கியத்துவம் பெறுகின்றது. லிபியப் புரட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான ஹாப்ரர், கேணல் கடாபியின் நண்பரே. ஆப்ரிக்க நாடுகளில் ஒன்றான சாட் நாட்டில் லிபியாவின் சார்பில் நடாத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்த அவரை, ஒரு காலத்தில் கைவிட வேண்டிய நிலை கடாபிக்கு உருவான வேளை அவரின் எதிரியாக மாறினார் ஹாப்ரர்.

பின்னாளில் அமெரிக்கா சென்று அங்கே வசித்து வந்த ஹாப்ரர், 2011இல் லிபியாவில் உருவான பதற்ற நிலையை அடுத்து நாடு திரும்பினார். கடாபியின் மறைவின் பின்னர் லிபியாவின் இரண்டாவது பெரிய நகரமான பெங்காஸியில் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் பிடி இறுகியதை அடுத்து, அவர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு நகரை விடுவித்தார். தொடர்ந்து மக்கள் ஆதரவு




அவருக்கு அதிகரித்தது. தற்போதைய நிலையில் லிபியாவின் பெரும்பாலான நிலப் பிரதேசம் அவரது படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. அது மாத்திரமன்றி, நாட்டின் முக்கிய பொருளாதார வளமான எண்ணெய் வயல்களையும் அவரே கட்டுப்பாட்டில் வைத்துள்ளார். இவரது வேகமான படை நடவடிக்கைகளுக்கு ரஸ்ய நாட்டில் இருந்து சென்றுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட தனியார் இராணுவத்தினரும், இராணுவ ஆலோசகர்களும் பெரிதும் உதவி வருகின்றனர்.

தலைநகர் திரிப்பொலியை மாத்திரம் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஐ.நா. அங்கீகாரம் பெற்ற அரசாங்கம் தற்போது கையறு நிலையிலேயே உள்ளது. இந்நிலையில், சிரியாவில் பயிற்சி பெற்ற துருக்கி ஆதரவு கெரில்லாக்கள் இரண்டாயிரம் பேரை துருக்கி இந்த அரசாங்கத்திற்கு ஆதரவாக அனுப்பி வைத்துள்ளது.

ரஸ்ய அனுதாபியாகவே கேணல் கடாபி விளங்கி வந்தார். இந்நிலையில் ஜெனரல் ஹாப்ரர் வெற்றி பெற்றால் தனது ஆயுதத் தளபாடங்களை விற்பனை செய்து வருமானத்தை ஈட்டுவது மட்டுமன்றி, தனது செல்வாக்கு வளையத்தினுள் லிபியாவை வைத்திருக்கலாம் என்பது ரஸ்யாவின் கணக்கு.

இஸ்லாமிய உலகில் தனது செல்வாக்கை உயர்வாக வைத்திருக்க விரும்பும் துருக்கி ஒட்டோமான் சாம்ராஜ்யத்தின் முன்னொரு காலத்தில் மாகாணமாக வியங்கிய லிபியாவை தனது செல்வாக்கு வளையத்தில் கொண்டுவர முயல்கிறது. இதன் ஒரு அங்கமாக லிபியாவிற்கு ஆயுதப் படைகளை அனுப்பி வைக்கும் நோக்கில் தீர்மானமொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரமும் பெற்றுள்ளது.

சிரிய விவகாரத்தில் ஒன்றுக்கொன்று எதிரான நிலைப்பாட்டினை ஆதரித்து நிற்கும் ரஸ்யாவும் துருக்கியும் உள்நாட்டில் பல இணைந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு மோதல்தவிர்ப்பு விடயங்களில் சாதனைகளை நிகழ்த்தி நிற்கின்றன. லிபியாவிலும் எதிரெதிர் தரப்புக்களை ஆதரித்து நிற்கும் போதிலும் சிரியா போன்ற அணுகுமுறைகளைக் கடைப்பிடித்து இரு நாடுகளும் இணைந்து அமைதியை நிலைநாட்டுவார்களா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

அமெரிக்க அரசுத் தலைவராக டொனால்ட் ட்ரம்ப் பதவிக்கு வந்ததன் பின்னான காலப் பகுதியில், உலக அரங்கில் அமெரிக்காவின் செல்வாக்கு குறைந்து வருவதைப் போன்று தென்படுகின்றது. சிரிய விவகாரத்தில் அமெரிக்கா தொடங்கி வைத்த உள்நாட்டு யுத்தம், ரஸ்யத் தலையீடு காரணமாக முடிவிற்கு வரக் கூடிய ஏதுநிலை உருவாகி உள்ளது. ஒரு கட்டத்தில் சிரிய அதிபர் அசாட் பதவியில் இருந்து அகற்றப்படக் கூடிய அபாயம் இருந்ததை மறுத்துவிட முடியாது. இருந்தும் ரஸ்யத் தலையீடு அசாட்டின் அரசாங்கத்தைப் பலப்படுத்தி உள்ளதுடன் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இயல்பு வாழ்க்கையையும் ஏற்படுத்தி உள்ளது.

அத்தகைய அணுகுமுறை லிபியாவிலும் சாத்தியப் படுமா? நம்புவதற்கு எதுவுமே இல்லாதபோதில், எதையாவது நம்பியே ஆக வேண்டும் என்ற நிலை உருவாகும். லிபிய மக்களின் நிலை இன்று அதுவாகத்தான் இருக்கும். அவர்களோடு சேர்ந்து நல்லது நடக்கும் என நாமும் நம்புவதைத் தவிர, வேறு வழியில்லை.



# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்







**மண்மணம் மாறாத சுவைதரும்
தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்**


மொத்தமாகவும், சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை விற்பனை செய்ய
விரும்புவோர் தொடர்புகொள்ளுங்கள்




ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான
உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள்,
இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும்
பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்

**www.jaffnastores.com**
**info@jaffnastores.com**





# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

**பகுதி.28**

ஒரு நாட்டுக்குள் உளவு நிறுவனங்கள் எந்த அடையாளத்துடன் ஊடுருகின்றன என்பதைக் கண்டறிவது கடினம். நவீன விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகளாக உளவறிதலுக்குப் பல நுண்மையான கருவிகள் பயன்படுத்தப் படுகின்றன.

சுற்றுலாப் பயணிகளாக, பொருளாதார ஒப்பந்தக்காரர்களாக, கல்வியாளர்களாக, மதத்தை பரப்புபவர்களாக, தூதரகங்கள் எனப் பல தோற்றங்களில் உளவு நிறுவனங்கள் ஒரு நாட்டுக்குள் ஊடுருவுகின்றன.

வல்லரசு நாடுகளின் அத்தனை பலமான கட்டமைப்புகளைக் கொண்ட நாடு, தனது நாட்டுக்குள் நுழையும் ஒவ்வொருவரையும் அவருக்குத் தெரியாமலே அவரைக் கண்காணித்த போதும், இத்தகைய நாட்டுக்குள்கூட நவீன விஞ்ஞானத்தின் துணை கொண்டு உளவு நிறுவனங்கள் ஒற்றர்களை வைத்து, அந்த நாட்டின் அனைத்து கட்டமைப்பும் எதில் தங்கியிருக்கின்றது என்ற அத்திவாரத்தை கண்டறிகின்றன.

அதே வேளை வளராத நாடுகளுக்குள்ளும், வளர்ந்து பின் வீழ்ந்த நாடுகளுக்குள்ளும், வளர்ந்து கொண்டிருக்கும் நாடுகளுக்குள்ளும் மிகவும் இலகுவாக உளவு நிறுவனங்கள் நுழைந்து விடுகின்றன.

ஒற்றர்கள் வைத்திருக்கும் நவீன உளவுக்கருவிகள் வெளிப்பார்வைக்கு அனைவரும் பாவிக்கும் கைத் தொலைபேசிகள் போன்றும், சாதாரண பேனாக்கள் போன்றும், சாதாரண மூக்குக்

**நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தும் உளவு நிறுவனங்கள்.**



# DORTMUND மாநகரத்திலே தாயக மரக்கறிகள், பழவகைகள் மற்றும் உணவுப் பொருட்களை மொத்தமாக பெற்றுக் கொள்ள நாடுங்கள்

StaR-Impex




Rabeena Since 1986 We've Mastered Taste

Aachi The Mother of Good Taste

BTM

பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்

Double Horse

Bringing Health to Life

## Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698
email : info@star-impex.de
web : www.star-impex.net

TRS ASIA'S FINEST FOODS



MDH · Laziza International · Cock Brand · DAAWAT The Finest Basmati · Elephant House · Shan · Akash Basmati · Rubicon · Tilda Legendary Rice

Nestle · PG tips · Niru Brand · AROY-D · MTR · Aashirvaad · Pillsbury · Patak's Original · Laila

# PAGEVISION

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

**www.pagevision.ch**

உங்கள் கணினிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்



- ATX Standard Tower, 2x USB Front Anschluss, in 5 Farbvariationen erhältlich
- Intel Pentium G4400, 2x 3.30GHz, Dual Core, 3MB Cache
- Intel H110 Chipsatz, Gigabyte GA-H110M-DS2 Mainboard
- 8GB DDR4 Ram, Markenprodukt, 2133MHz
- 120GB SSD Laufwerk, 550MB/s lesen - 350MB/s schreiben
- 22x DVD-Brenner +/-/RAM Dual Layer
- Kartenleser für alle Formate
- 8-Kanal Sound für Surround Systeme
- 10/100/1000Mbit Netzwerkanschluss für Netzwerke und Breitband-Internet
- Windows 10 installiert und konfiguriert, inkl. DVD und Lizenz
- 21.5" Breitbild-Flachbildschirm, 5ms, integrierte Lautsprecher
- kabellose Maus (optisch) und Tastatur

## PC Systems

**CHF 695.- inkl. MwSt**



## Note Books

- AMD E-450 Dual Core Prozessor, 2x 1.66GHz
- 4GB DDR-3 RAM, Markenprodukt
- 400GB Festplatte, 8MB Cache, 5400RpM
- DVD-Brenner Laufwerk, ±R/±RW/Dual Layer
- AMD® A50M FCH Chipsatz
- 15.6" HD LED Display, spiegelnd, Auflösung 1366 x 768
- ATI Radeon HD6310 Grafik integriert, bis 1469MB dynamisch
- 10/100Mbit Netzwerkkarte
- integriertes Mikrofon und Lautsprecher
- Gewicht 2.3kg inkl. Akku
- 300Mbit WLAN, UMTS optional
- Schweizer Tastatur inkl. 10er Zahlenblock
- 374 x 250 x 14.3-34.1mm
- Netzteil, Akku (Laufzeit 3-4.5h)
- Windows 7 Home Premium, installiert und Konfiguriert, inkl. DVD und Lizenz

**CHF 499.- inkl. MwSt.**

## Reparaturen Aller Marken

- Sehr Schnelle Lieferung!
- Hauslieferungen
- Vor-Ort Installationen
- Netzwerklösungen für Firmen
- Reparaturen aller Marken!

günstige gebrauchte Computer
Reparaturen aller Marken

**www.pckaufen.ch**

Tellstr.31, 8004 Zürich - Tel : 043 317 9101
Kirchgasse 33, 8302 Kloten - Tel : 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel : 052 203 15 50
Rosengartenstrasse 4-8037 Zürich - Tel : 044 271 00 07

## iPhone Reparaturen

www.iphonefan.ch

கண்ணாடிகள் போன்றும் தோற்றமளித்தாலும், அவை ஒற்றர்களைத் தவிர வேறு எவருக்குமே அதனுடைய இன்றைய நாளுக்கான இறுதி நவீன தொழில் நுட்பத்தை அவை கொண்டிருக்கும்.

இந்த தொழில்நுட்பத்தின் நிழலைக்கூடத் தரிசிக்காத மேற்கூறிய நாடுகளுக்குள் இவை இலகுவாக நுழைந்து விடுவது மட்டுமல்ல, இத்தகு நாடுகளிடம் உளவுநிறுவனங்கள் பயன்படுத்தப்படும் கருவிகளின் தொழிற்பாடு என்ன? என்பதைக்கூட கண்டறிய முடியாத கருவிகளே இவர்களிடம் இருக்கும்.

இன்றைய நவீன தொழில் நுட்பத்தில் அதிஉச்ச தகவல்களை அறியும் கருவிகளாக இருப்பவை சாதாரண பேனாக்கள் போன்று இருக்கும் மிக வல்லமை பொருந்திய ஒலி- ஒளி வலையமைப்பைக் கொண்டவையே.

அதே போல மூக்கு கண்ணாடியுமாகும். பேனாவையோ மூக்குக் கண்ணாடியையோ எப்படித்தான் உருட்டிப் புரட்டிப் பார்த்தாலும், அதனுடைய தொழில்நுட்பத்தைக் கண்டறிவது மிக மிகச் சிரமமானது.

ஒரு நாட்டுக்குள் நுழையும் நுழைவாசல்களாக இருக்கும் தரைவழி நுழைவாசல்கள், ஆகாயவழி நுழை வாசல்கள், கடல்வழி நுழைவாசல்கள் ஆகியவற்றில் எவ்வளவுதான் பரிசோதித்தாலும் அதன் தொழில் நுட்பத்தைக் கண்டறியவே முடியாது. விமான நிலையங்களில் அதிதொழில் நுட்பத்துடன் கூடிய ஊடகதிர் ***(Scanning Equipment)*** இருந்த போதிலும், அவற்றில் உளவு நிறுவனங்களின் ஒற்றர் வேலைக்காகத் தயாரிக்கப்பட்டிருக்கும் தொழில்நுட்பத்தை கண்டறியவே முடியாது.

ஏனெனில் விமான நிலையங்களிலோ அல்லது தரைவழி


அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11


பரிசோதனை நிலையங்களிலோ அல்லது துறைமுகங்களில் உள்ள பரிசோதனை நிலையங்களிலோ இருக்கும் ஊடுகதிர் கருவியின் தொழில் நுட்பத்தை அறிந்து, அதனையும் மீறிய தொழில் நுட்பத்தையே உளவு நிறுவனங்கள் கொண்டிருக்கும்.

நலிந்த நாட்டுக்குள் நிலை கொண்டிருக்கும் வல்லரசு நாடுகளின் தூதரகங்கள், அந்த நாட்டுக்கு உதவி செய்வது போல பாசாங்கு செய்தாலும், அத்தகைய நாடுகளை வளரவிடாமல் தடுப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கும்.

நலிந்த நாடுகளிலும்கூட நவீன அரசியல்வாதிகள் தோன்றி, தமது நாட்டை முன்னேற்ற வேண்டுமென எண்ணி, தமது நாட்டில் இருக்கும் அனைத்து வளங்களையும் பயன்படுத்துவார்கள்.

இரண்டு பிரதான வளங்களாகப் பார்க்கப்படுபவை விவசாயமும், தொழிற்சாலை சார்ந்த உற்பத்திகளுமே!. தமது பொருட்களை மலிவு விலையில் ஏற்றுமதி செய்து, தமது நாட்டின் பொருளாதாரத்தையும், முன்னேற்ற முயற்சிகளும் தடையேற்றுமளவிற்கு தூதரகங்கள் செயல்படும்.

நலிந்த நாட்டில் வாழ்பவர்களின் வாழ்க்கைத்தரம் வறுமையுடனும், வறுமைக் கோட்டுக்கு கீழேயிருக்கும். இத்தகு நாடுகளில் மிகக்குறைந்த வருவாயைப் பெறுபவர்களே அதிகளவு சனத்தொகையினராக இருப்பார்கள்.

இத்தகையவர்கள் ஊடாக போராட்டத்தை தூண்டிவிடுவது இலகுவானது. தூதரகங்கள் மூலம், உதவி செய்யும் அமைப்பினராக போராட்டக்காரருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்பவர்கள் தொழிற்சாலை பற்றிய முழு விபரங்களையும், தொழிலாளர்களின் சங்கங்கள் பற்றிய முழு விபரங்களையும் அறிந்து கொள்வார்கள்.

போராட்டக்காரர்களிடமிருந்து தகவல்களைச் சேகரிப்பதற்காக நவீன பேனாக்களும் மூக்குக் கண்ணாடிகளும் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பெடுப்பதோ, ஒலிப்பதிவு செய்வதோ, போராட்டக்காரர்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தும் என்பதற்காக யதார்த்தமாக உரையாடுவது போல இருந்தாலும், அவர்கள் அணிந்துள்ள மூக்குக் கண்ணாடி வழியாக அனைத்து விபரங்களும் ஒலியொளி அலைகளாக தூதரகங்களைச் சென்றடைந்து கொண்டேயிருக்கும்.

இன்னும் அதிதொழில் நுட்பமாக உளவு நிறுவனங்களைக் கொண்டிருக்கும் நாடுகளையே சென்றடைந்த விடும். உதவி செய்பவர்கள் உண்மையானவர்கள் என நம்பி, போராட்டக்காரர் கொடுக்கும் தகவல்கள் மட்டுமல்ல, போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்ற எண்ணத்தையும் போராட்டக்காரர்களின் மனதில் ஆழமாகவே விதைத்து விடுவார்கள்.

தமது நாட்டு உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்து, நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற தேசிய உணர்வுள்ள அரசியல்வாதிகள் போராட்டக்காரர்களின் விடாப்பிடியான போராட்டங்களால் மிகவும் சங்கடத்துக் குள்ளாவார்கள்.

இது சறுக்கு மரத்தில் ஏறி, இலக்கத்தை தொட வேண்டுமென்பதற்கு ஒப்பானதாகும்.

(தொடரும்)





வெற்றிமணி அன்னை
நவநிதி. சுப்பிரமணியம்
(இளைப்பாறிய ஆசிரியை)
நூற்றாண்டு அரங்கம்

அன்னையை வணங்குவோம்! பெண்மையைப் போற்றுவோம்!!

# மகளிர் தினம் பங்குனி 08

# INTERNATIONAL WOMEN'S DAY

## புதுமைப் பெண்கள் 2020

**08.03.2020 Sunday**

Women's day

MARCH 8TH



ஆட்டம் பாட்டம்
கொண்டாட்டம்





பிரதம விருந்தினர்

**Dr.K. சுபாஷினி**

( தமிழ்மரபு அறக்கட்டளை நிறுவனர் )





**நிகழ்ச்சி தொகுப்பாளினிகள்:**

அபிரா வித்தியா

சொல்லுங்கள்!
வெல்லுங்கள்!!

**Women's Day**
**08.March.2020**
**Sunday 14.30 - 20.30**

அரங்க நிர்வாகம்
சி. சக்திவேல், சிவ. வினோபன், கோபி
கலைநிதி சபேசன், ஜெயா சக்திவேல்,
கீர்த்திகா.

**முன்னணியும்**
**பின்னணியும்**

மண்டபம்: PALAZIO | KASINOSTR. 25 42103 WUPPERTAL

பிரவேசம்:
இலவசம்



பாகம் - 12

# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

**ஆய்வாளர் சேது, அமெரிக்கா**

ஈழ இனவழிப்பின் காரணமாக, உலகில் பல தமிழர்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டார்கள். இதற்குக் காரணம் அவர்களின் சுயத்திலும் 'ஈழம்' ஒரு பாகத்தைக் கொண்டிருக்கிறது. ஈழ அழிப்பு என்பதை, தங்களின் ஒரு பாகம் இறந்து போனதாகவே உணர்வர். ஈழத்தை முழுதாக சுயத்தில் உள்வாங்கிய முத்துக்குமார், முருகதாசன் போன்றவர்கள், வாழ்வை மாய்த்துக் கொண்டார்கள்.

அதே நேரம் பல தமிழர்கள் “மானாட மயிலாட” பார்த்து இரசித்துக் கொண்டிருந்தார்கள். இதற்குக் காரணம், அவர்களின் சுயத்தில் 'தமிழர்' என்ற அடையாளமோ அல்லது ஈழமோ இல்லை. இது அவர்களின் குற்றமில்லை. குறிப்பாக அவர்கள் வளரும் வயதில் அவர்களுக்கு அமைந்த சூழல்தான் அடிப்படைக் காரணம்.

நடத்தை விதிகள், அதீத ஒழுக்கத்திற்கும், ஒத்துழைப்பிற்கும் ஏற்றவாறு விதிகளும் பழக்கவழக்கங்களும் உருவாக்கப்பட்டன. கைப்பிடித்தல், மது அருந்துதல், பாலியல் ஒழுக்கமின்மை தடை செய்யப்பட்டது. உலகிலேயே பாலியல் குற்றச்சாட்டு இல்லாத ஒரே இராணுவம் புலிகள்தான்.

சாதி மத வேறுபாடுகள் களையப்பட்டு, அனைவரும் 'தமிழர்' என்ற உணர்வு கொண்டுவரப்பட்டது. வெவ்வேறு மதத்தினர் ஆனாலும், அனைவருக்கும் மத சார்பற்ற தமிழ்ப்பெயர் வழங்கப்பட்டது. அனைவரும் அண்ணன் தம்பி, அக்காள் தங்கை உறவுமுறைக் கொண்டு பெரிய குடும்பமாக ஒற்றுமையாக செயல்பட்டார்கள்.

எதிரிகளிடம் பிடிபடக்கூடாது. அவ்வாறு பிடிபட்டால் சயனைடு அருந்த வேண்டும் என்ற பழக்கம் கொண்டு வரப்பட்டது. உலகில் இதுபோன்ற ஒழுக்கமுள்ள, எதிரிகள் நடுங்கும் ஒரு படை இருந்ததென்றால் அது சப்பானியர்களின் சாமுராய் படைகள்தான். அவர்கள் இரு கத்திகள் வைத்திருப்பார்கள். பெரிய கத்தி போர் புரிவதற்கென்றும், சிறிய கத்தி எதிரிகளிடம் பிடிபடாமல் இருப்பதற்காகவும், மானத்தைக் காப்பதற்காகவும் வயிற்றைக் கிழித்து தற்கொலை செய்துகொள்ள பயன்படுத்தினார்கள். இதுபோன்ற பழக்கம் வீரர்களிடம் மரண பயத்தை முற்றிலும் நீக்கி, எதிரிகளிடம் மரண பயத்தை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

நீங்கள் நினைக்கலாம், இவ்வளவு ஓர் ஒழுக்கமான இயக்கம் என்றால், அவர்கள் எந்திரம்


சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவல்லரி சாம்ராஜ்யம்
NS Jewellery & Textiles
தாலி மற்றும்
பொன்னுருக்குதல்,
இவையாவும் இங்கு
செய்து தரப்படும்
ஒவ்வொரு வருடமும் தைமாதம்
எமது ஸ்தாபனத்தால்
தங்கநகை
சேமிப்புத்திட்டம்
ஆரம்பிக்கப்படுகின்றது.
மாதம் 100 CHF என 12
மாதம் 1200 CHF இணைய
விரும்புவோர் உங்களது
பெயர்களை முன்கூட்டியே
பதிவு செய்யலாம்.
nfo@nsjewellery.com
Neugasse 58, 8005 Zürich, Switzerland
www.nsjewellery.com
Tel: 044 440 60 50
Fax: 044 440 60 52


உயர்தர புடவைகள்
மற்றும் துணி வகைகள்
வாங்க சிறந்த இடம்
Rani
palace
044 440 60 52
ranipalace60@gmail.com
Tel : 044 440 60 52
Neugasse 60, 8005 Zurich - Switzerland

போல எந்த இன்பமும் இல்லாமல் வாழ்ந்திருப்பார்கள் என்று. இது ஏனென்றால், நாம் பெரிதாக சாதிக்க வேண்டுமென்றால் தியாகம் செய்து, துன்பங்களை ஏற்று உழைத்து வெற்றிகொள்ளவேண்டும் என்று நாம் சிந்திக்கிறோம். ஆனால் உண்மை என்னவென்றால், இவ்வுலகில் புதுமையைப் படைத்த எவரும், அவர்கள் செயலில் துன்பம் கண்டு சாதிக்கவில்லை, மாறாக இன்பம் கொண்டே சாதிக்கின்றனர். சிறந்த அறிவியலாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள், ஓவியர்கள், இசை அமைப்பாளர்கள், புலவர்கள் அனைவரும் அவர்களின் படைப்பில் எல்லையில்லா இன்பம் காண்கிறார்கள். அதனால்தான் அவர்கள் அதிக வெற்றி பெறுகிறார்கள்.

துன்பப்படும் மனதால் புதுமையைப் படைக்கமுடியாது. இந்த இன்ப நிலையை உளவியலாளர் ***Mihaly Csikszentmihali*** "ஓட்டம்" ***(flow)*** என்கிறார். ஒருவர் தொடர்ந்து கற்று, தன்னை வளர்த்துக் கொண்டு, புதுமைகளைப் படைக்கும் பொழுது அவர்கள் இந்த ஓட்ட நிலையை அடைகின்றனர். அப்பொழுது இன்ப நிலையையே அடைந்து, காரியத்தில் குறியாக நிற்காமல் தொடர் ஓட்டத்தில் இருப்பர். மற்றவர்களுக்கு அதுபோன்றவர்களை பார்ப்பதற்கு இயந்திரம் போலத் தெரியலாம், ஆனால் உண்மையில் அவர்கள் அதியுச்ச இன்பநிலையில் இருப்பர். அதனால்தான் அவர்களால் அவ்வாறு செய்ய முடிகிறது. ஒருவரின் மனதில் ஈடுபாடு இல்லை என்றால், அந்தக் காரியத்தை நீண்ட நேரம் செய்ய இயலாது.

புலிகள் கண்ட இன்பமும் இதுபோன்ற ஓட்ட நிலையில் கிடைக்கும் இன்பமே. அவர்கள் இயக்கம் ஆரம்பித்ததிலிருந்து படு வேகமாக கற்று, வளர்ந்து, பல வெற்றிகளை ஈட்டி, மாபெரும் சாதனைகளைப் படைத்தார்கள். அவர்கள் பெற்ற வெற்றிகளில் உலகத் தமிழர்கள் எல்லாம் துள்ளிக் குதித்தார்கள் என்கிறபொழுது, களத்தில் வெற்றிகண்ட அவர்கள் எதுமாதிரியான இன்ப நிலையில் இருந்திருப்பார்கள் என்று எண்ணிப் பார்க்கலாம்.

ஈழ இனவழிப்பிற்குப்பின் இன்றைய தமிழ்ச்சமூகம் ஒரு துன்ப நிலையை அடைந்துள்ளது. இதிலிருந்து மீண்டு இன்ப நிலையை அடைய வேண்டுமானால், புலிகளைப் போல ஒரு ஓட்ட நிலையை நாம் அடைய வேண்டும். அதற்கு இன்றைய தேவைக்கேற்ப தொடர்ந்து கற்று, புதுப்புது அமைப்புகளை உருவாக்கி, நாம் வளர்ந்து கொண்டே இருக்க வேண்டும். வேறுவழி இல்லை.

சடங்குகள் ஒரு சமூகத்தை "நாம்" என்று ஒற்றுமைப்படுத்தி, ஒத்துழைப்பைப் பெருக்கி, எது முக்கியம்? என்று உணரவைத்து மக்களை திரள வைக்கிறது.


புத்தகம் வெளியிட வேண்டுமா..?




பத்திரிகைப் பணியில் இருபத்து இரண்டு ஆண்டுகளாகப் பல சாதனைகளை நிகழ்த்தி வரும் இனிய நந்தவனத்தின் அடுத்த முயற்சியாக இனிய நந்தவனம் பதிப்பகம் மூலம் பல நல்ல நூல்களையும் பதிப்பித்து வருக்கிறோம். எங்களின் இந்த முயற்சிக்கு வாசகர்கள் மற்றும் எழுத்தாளர்களின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் வரவேற்கிறோம்.
தங்களின் கதை, கவிதை, கட்டுரை, சிறுகதைகளை உலகத்தரத்தில் ISBN எண்களோடு புத்தகமாக உருவாக்கித் தருகிறோம். புத்தக வெளியீட்டு விழா மற்றும் அனைத்துப் பரிசுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான வழிகாட்டுதலையும் செய்து தருகிறோம்.

எழுத்துப் பிரம்மாக்களே!

தொடர்பு கொள்ளுங்கள்

இனிய நந்தவனம் பதிப்பகம்




மின்னஞ்சல் : nandavanam10@gmail.com
இணையதளம் : www.nandavanam.com

மேலதீக விபரங்களுக்கு : +91 94432 84823





புலிகள் உருவாக்கிய ஒரு பெரிய சடங்கு 'மாவீரர் நாள்'. கார்த்திகை மாதமே 'மாவீரர் மாதம்' என்றானது. இது புலிகளையும், மக்களையும் "தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்" என்று ஒன்றைக் குறிக்கோளில் உணர்வுப்பூர்வமாக இணைத்தது. மக்களுக்கு இது வருடம் ஒருமுறை வரும் சடங்காக இருக்கலாம். ஆனால், புலிகளுக்கு இது தினந்தோறும் நடக்கும் சடங்கு. சடங்குகளின் பலம் என்பது அது உருவாக்கும் உணர்வுகளிலிருந்து வருகிறது. ஒவ்வொரு புலிவீரன் விதைக்கப்படும் பொழுதும், மற்ற வீரர்களிடம் குறிக்கோளின் மீதான பற்று மேலும் உறுதியாகிறது..

மனிதனை இயக்குவது அவனது உணர்வுகளே!. மனிதனின் பகுத்தறிவு என்பது அவனது உணர்வுகளுக்கு அடிமை என்று உளவியல் ஆராய்ச்சிகள் கூறுகிறது. மக்களை பகுத்தறிவு பேசி ஒன்று திரட்ட முடியாது, அவர்களை உணர்வுகளின் மூலமே ஒன்று திரட்ட முடியும். அந்த உணர்வுகளை உருவாக்குவதில் சடங்குகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. புலிகளுக்கும், மக்களுக்கும் மாவீரர் சடங்குகள் அந்த உணர்வை அளித்து, அவர்களை வீரியமுடன் செயல்பட வைத்தது.

தமிழ்நாட்டில் இன்று பல்வேறு சிக்கல்களைத் தீர்க்க மக்களை ஒன்று கூட்ட முடியாமல் போவதற்கு, தமிழர் என்ற உணர்வை அளிக்கும் சடங்குகள் இல்லை என்பது ஒரு முக்கிய காரணம். சாதி மதங்கள் அவர்களுக்கென்று பல சடங்குகள் வைத்திருக்கிறார்கள், அதனால் மக்களை எளிதாக சாதி மதங்களை அடிப்படையாகக் கொண்டு ஒன்று திரட்ட முடிகிறது.

தமிழருக்கென்று இருக்கும் ஒரே சடங்கு பொங்கல்தான். அந்த சடங்கு உருவாக்கிய உணர்வினால்தான் மக்கள் சல்லிக்கட்டு போராட்டத்திற்கு வரலாறு காணாத மக்கள் போராட்டம் நடந்தது. மக்கள் சிந்தித்து செயல்படுவதில்லை, உணர்வுகளின் உந்துதலினால் செயல்படுகின்றனர் என்ற உண்மையை உணர்வது முக்கியம். மாவீரர் நாளை ஒவ்வொரு தமிழரும் அனுசரிப்பதற்கு வழி செய்யவேண்டும். மேலும் வருடம் முழுவதும் தமிழர் என்ற உணர்வைக் கொண்டுவர மேலும் பலசடங்குகள் உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் மக்களை ஒன்று திரட்டி சிக்கல்களைத் தீர்ப்பது எளிதாகும்...

(தொடரும்)

# உள்ளம்
## திறக்கும் உண்மைகள்

"உளம் திறக்கும் உண்மைகள்...." என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

### குடமுழுக்கு

கும்பாபிஷேகம் என்பதை
குடமுழுக்கு என்றதால்
கடவுள் கோபித்தாராம்
அட ஆரியக் கடவுள் போல...



### வானரம்

வாலோடு இருந்தால் வானரம்,
வாலில்லாமல் இருந்தால் மானிடம்,
வேறொன்றுமில்லை

### வட்டி

வட்டிக்கு கடன் கொடுப்பது
பாவமாம்
வங்கிகளின் பாவக்கணக்கு
எங்கே எழுதப்படும்..?

### பிரச்சனை

பிரச்சனைகளைச்
சிந்தித்தல் தவறாம்,
சிந்தனையே
பிரச்சனையானவனின்
வழி என்ன ?



### நிலவு

ஒரே ஒரு நிலவு இருந்ததால்
தப்பித்தோம்,
இல்லையெனில்
கவிஞர்களின் தலை
காய்ந்திருக்கும்
இரண்டு பிரிவாக

### குற்றவாளிகள்!..

வாள்வெட்டு, கொலை, கொள்ளை
கற்பழிப்பு போதைப்பொருள் உச்சம்
குற்றவாளிக் கூண்டில் - இன்று
புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள்!..

### மாற்றம்!..

ஏட்டில் எழுதிய நாம் - இன்று
கணனியில் எழுதுகிறோம்
புறாவைத் தூதுவிட்ட நாம்
மின்னஞ்சலில் அசத்துகிறோம்!..

### மென்மை!..

கால்ப்பந்து, கராத்தே, யூடோ
குதித்தலும் பாய்தலும் பறத்தலும்
பெண்ணுக்குத் தேவையில்லையாம்
ஏனெனில் பெண் மென்மையானவள்!..



### விவசாயி!..

குறிக்கோளில் குறியாய்
முழுமூச்சோடு உழைப்பு
நாள் தோறும் வியர்வை
கஞ்சிக்குத் தினம் அலைவு!..

**வ.சிவராசா**



# அகர கவிக்களம்....



நீ
சத்தியத்தின் சோதனையோ
யுத்தத்தின் வேதனையோ
உணவின்றி உடல்மெலிந்தாய்
உடல்உறுப்புக்கள்
ஒவ்வொன்றும் இழந்தாய்
உறவுகளில்லை,உடமைகளில்லை
ஒருகரத்தில் கனம்சுமந்த-உன்
மனபலத்தால்
நாளை நீ சாதனை
படைத்திடுவாயே...

அகல்யா

தேவன்

# நான் தெள்ளியவோர் முடிச்சவிக்கி

'குளிர்களி' என்று தமிழில் பெயரமைக்கப்பட்ட **Ice cream** முன்பெல்லாம் இயற்கையாக விளைவிக்கப்படும் பயிர்களிலிருந்து சுவையூட்டப்பட்ட உணவாக இருந்து வந்தது. ஆனால் இப்போதெல்லாம் அந்தப் பாரம்பரியத்திலிருந்து 'குளிர்களி' தொலைவாகி விட்டது.

"பெருத்து வரும் சனத்தொகைக்கு ஏற்ற வகையில் வியாபாரம் செய்ய வேண்டுமென்றால், இயற்கையாக விளைவிப்பதெல்லாம் நடவாத காரியம்" என்கிறார்கள் உற்பத்தியாளர்கள். ஆனால் அதைச் சாக்காக வைத்து, அவர்கள் செய்யும் பாதகச் செயலைத் தெரிந்து கொள்ளாமல் இருந்துவிட முடியாது.

'குளிர்களி' உற்பத்தி நிலையங்கள் பல தங்களுடைய செலவீனத்தைக் குறைத்து, அதிக இலாபம் ஈட்டுவதற்காக மக்களுடைய வாழ்க்கையில் கை வைப்பதை ஏற்றுக்கொள்ள இயலாதல்லவா? இது எங்கே போய் முடியும்?

நீங்கள் வாழும் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப, உணவில் கலக்கப்படும் இரசாயனங்கள் உணவுப் பொதியின் பின்புறத்தில் அச்சடிக்கப் படுவதுண்டு. ஆனால், இது மேற்குலக நாடுகளில் மட்டுமே எதிர்பார்க்க முடியும். ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் இதையெல்லாம் கவனிப்பாரில்லை. பார்த்தவுடன் நாவூறச் செய்யும் பல 'குளிர்களி' உற்பத்தி நிறுவனங்கள் கவர்ச்சியான பைகளில் அவற்றை அடைத்து, எப்படியாவது உங்களை வாங்கச் செய்துவிடுவார்கள். ஆனால்



அவற்றில் அதிகமாக அடைக்கப் பட்டுள்ள இரசாயனக் கலவைகள் பற்றி நீங்கள் சிந்தித்ததுண்டா?



***Diethyl glycol (DEG ) :*** இந்த இரசாயனக் கலவை வர்ணப்பூச்சுகளில் அதிகம் கலக்கப்படுவதாகும். அதேபோல ஐரோப்பிய நாடுகளில் ஏற்படும் அதீத குளிர்கால நிலையில் ஊர்தி இயந்திரங்கள் இறுகி செயற்பாட்டைத் தடுக்கப்படாமல் இருப்பதற்கு உபயோகிக்கப்படும் இரசாயனமாகும். இந்த இரசாயனக் கலவை பற்பசையில் கலப்பதற்குக் கூட அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், ஏன் ‘குளிர்களி’யில் கலக்கிறார்கள்?

***Piperonal (Heliotropin) :*** வனிலாவின் விலை அதிகரிப்பின் காரணமாக, வனிலாச் சுவையைக் குறைந்த சுவையில் ஊட்டுவதற்காக இந்த இரசாயனத்தைப் பயன்படுத்துகிறார்கள். சர்வதேச மருத்துவ நூலகத்தின் தரவுகளில் இது ***(HSBD ) Toxic*** (நச்சு) என்று குறிப்பிடப்படுகிறது. ‘குளிர்களி’யை குளிர்சாதனப்பெட்டியில் இருந்து வெளியே எடுத்ததும், இறுக்கமான நிலையைத் தளர்த்தி, உடனடியாக உண்ணக்கூடியதாக மாற்றுவதற்காக இந்த இரசாயனம் உபயோகிக்கப்படுகிறது. ஆனால் அதனோடு இனிப்புச் சுவையைக் கலந்துவிட்டு, பாதிப்பற்றது போல் காட்டிக்கொள்கிறார்கள். ஆனாலும் நச்சு என்று குறிப்பிடப்படுவது எவ்வாறு பாதிப்பற்றதாக மாறும் ?

***Ethyl Acetate (Eto or EA) :*** அன்னாசிப்பழச் சுவையை செயற்கையாக ஊட்டுவதற்காக உபயோகிக்கப்படும் இரசாயனம் இது. உண்மையில் மிருகத்தோலை பதனிடவும், ஆடை உற்பத்திக்கான துணிகளைப் பதனிடவும் இது உபயோகிக்கப்படுகிறது. இந்த இரசாயனம் முற்று முழுதாக, இதயம் மற்றும் குடற்பகுதியை மோசமாகப் பாதிக்கும் வல்லமை கொண்டது.

***Aldehyde C - 17 :*** செர்ரிப் பழத்தின் சுவையை உருவாக்கும் இரசாயனம் இது. இலகுவில் தீப்பற்றக் கூடியதான இது நெகிழி மற்றும் குழைமம் ( ***plastic and Poliythin*** ) உற்பத்திக்கு உபயோகிக்கப்படுவதாகும்.

***Amyl Acetate :*** வாழைப்பழச் சுவையை ஊட்டப் பயன்படுவது இந்த


THOOYA COMMUNICATION






Lyca TV BOX எம்மிடம் கிடைக்கும்

Rheinische Str 80
44137 Dortmund

இரசாயனம். இதுவும் தீந்தைகளில் ***(paint)*** கலக்கப்படும் இரசாயனம் ஆகும்.

***Butyraldehyde (butanal) -*** உடலுக்கான வாசனைத் திரவியங்கள், மதுபானங்கள், குழைமம், பைஞ்சுதை ***(Cement)*** ஆகிய பொருட்களின் தயாரிப்பிற்காக இது உபயோகிக்கப்படுகிறது.

***Benzyl Acetate (phenylmethyl acetate) - õö¬ô, è†®èO™ (Soap)*** அதிகமாக கலக்கப்படும் இரசாயனம் இது.

***Propylene Glycol (1,2-propanediol or propane-1,2-diol) :*** உணவுக்கான நிறமூட்டிகளில் ***E1520*** என்று மறைமுகமாகக் குறிக்கப்படுவதாகும். விமானப்பறப்பின் போது, இறக்கைகளில் படிந்திருக்கும் பனிப்படிவை நீக்குவதற்காகப் பயன்படுத்தப்படுவது இது. புகைத்தலுக்கான உள்ளடக்கத்தில் கலக்கப்படும் பொருள் இது. அவ்வாறே, சமையற் பாத்திரங்களில் படிந்திருக்கும் கொழுப்பினை அகற்றும் திரவ அழுக்குநீக்கியிலும் இது உபயோகிக்கப்படுகிறது. நேரடியாக சிறுநீரகப் பாதிப்பு மற்றும் சிறுநீர் குழாய்களில் பாதிப்பை ஏற்படுத்த வல்லது.

***Sodium benzoate (E211) -*** வெளிப்பார்வைக்கு இது ஒரு சாதாரண இரசாயனமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் தீயணைப்புப் படையினர் தீயை அணைக்க உபயோகிக்கும் இரசாயனத்தில் இது முக்கியமானது. "வளர்சிதை மாற்றம் மற்றும் மரபணுச்சிதைவு ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிக்கும் இரசாயனம் இது" எனச் சொல்கிறார் ***Sheffield*** பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் பீற்றர் பைபர். அத்தோடு புற்றுநோயை உருவாக்கக்கூடிய வல்லமை இந்த இரசாயனத்திற்கு உண்டு.

***Polysorbate 80 (E433) :*** உணவிற்கான நிறமூட்டியாகப் பயன்படுத்தப்படும் அதேவேளை குளிர்களியிலும் அதிகமாகக் கலக்கப்படுகிறது. பலவகையான ஒவ்வாமைகளை உடலில் ஏற்படுத்தி, திடீர் இயக்கமின்மை, மாரடைப்பு ஆகியவற்றையும் ஏற்படுத்தும்.

இவையெல்லாம் சாவை உடனடியாகத் தந்துவிடாது என்று எண்ணி, நடப்பது நடக்கட்டும் என்று குளிர்களியை விழுங்குவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். முதுமையில் மருத்துவமனையின் உட்பக்கக் கூரையை மட்டுமே பார்த்தபடி அரையும் குறையுமாக உங்கள் வாழ்நாள் நீண்டுசெல்வதை தவிர்ப்பது உங்கள் கைகளிலேயே இருக்கிறது.

மூலம் : ***Global Health Renegade***





NEW ARRIVAL
AGAM
Healthy and tasty Foods
அகம்
அகத்தின் சுவை
சமையலில்
தெரியும்
உங்கள் அபிமான
கடைகளில்
பெற்றுக் கொள்ளலாம்.
StaR-Impex
www.star-impex.de

# தேவை - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில்

# தலைமை மாற்றமா? கொள்கை மாற்றமா?

**சண் தவராஜா**

இலங்கைத் தமிழர் அரசியலில் அண்மைக் காலமாகப் பேசுப் பொருளாக மாறியுள்ள விடயங்களில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஏற்படவுள்ள உத்தேசத் தலைமை மாற்றம் வெகுவாகச் சூடு பிடித்துள்ளது. தற்போதைய தலைவரான திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், 1977ஆம் ஆண்டில் தனிநாட்டுக்கான அங்கீகாரத்தைக் கோரி தேர்தலைச் சந்தித்து. தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் வெற்றிபெற்ற, தற்போது கூட்டமைப்பில் உள்ள ஒரேயொரு தலைவருமான இரா.சம்பந்தன், அடுத்த தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை, இளையோருக்கு வழிவிடப் போகின்றேன் என அறிவிப்புச் செய்த நாள் முதலாக இந்தப் பரபரப்பு நீடித்து வருகின்றது. இதில் முரண் நகையாகக் கூட்டமைப்பின் உள்ளே இல்லாத, பரபரப்பு கூட்டமைப்பிற்கு மாற்றாகக் களமிறங்கியுள்ள அணிகளுக்கு இடையேயே அதிகமாகக் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

'பலவீனமான எதிரணியைக் கொண்டிருப்பது இலகுவான வெற்றியைத் தரும்' என்ற சூத்திரத்தின் அடிப்படையில் சிந்திக்கும் கூட்டமைப்பின் எதிரணிக் கட்சிகள் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் உத்தியோகப்பூர்வ பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்கப் போகின்றார் என்ற செய்தியை(?) அடிக்கடி பேசி வருகின்றன. உண்மையிலேயே அந்தக் கட்சிகள் சுமந்திரன் அந்தப் பதவிக்கு வந்துவிட வேண்டும் என்று மனப்பூர்வமாக விரும்பவில்லை. மாறாக, அவர் தலைமைப் பதவிக்கு வந்து விடுவாரோ? என்கிற அச்சமே அவர்களை






இது தொடர்பில் பேச வைக்கின்றன. இவ்வாறான ஒரு வதந்தியைப் பரப்பி, கட்சிக்குள் உள் முரண்பாடுகளைத் தூண்டி விடலாம் என அவை நினைப்பது போலத் தெரிகின்றது.

ஒரு கட்சிக்கு யார் தலைவராக இருக்க வேண்டும்? என்பதையோ, யார் தலைவராக இருக்கக் கூடாது? என்பதையோ அந்தக் கட்சியும், தொண்டர்களுமே தீர்மானிக்க வேண்டும். அதுவே அறமும் கூட. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை அதன் எதிரிகள் இரா. சம்பந்தன், மாவை சேனாதிராஜா மற்றும் சுமந்திரன் போன்றோர் கட்சித் தலைமைப் பொறுப்பில் இருப்பதை விரும்பவில்லை. வேறு விதத்தில் சொல்வதானால், கட்சியை ஸ்திரமாக நடாத்திச் செல்லக் கூடிய, அனுபவம் குறைந்த ஒருவர் அந்த இடத்தில் இருந்தால், அது தமக்கு இலகுவான வெற்றியைப் பெற்றுத் தரும் என அவர்கள் நினைக்கின்றனர்.

ஆனால், என்னைப் பொறுத்தவரை மிக விரைவிலேயே சுமந்திரன் அவர்கள் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்பார் என நம்புகிறேன். இன்றைய நிலையில் முதல் நிலைத் தலைவர்களான சம்பந்தன் மற்றும் மாவை ஆகியோர் வயோதிபர்களாக ஆகிவிட்டனர். யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் கனவில் இருக்கிறார். கடந்த தேர்தலில் தனக்கு இருந்த வாய்ப்பை முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு விட்டுத் தந்தமைக்காக அவர் இன்றும் வருந்திக் கொண்டிருக்கின்றார். அந்தத் தவறை அவர் மீண்டும் இழைப்பதற்குத் தயாராக மாட்டார். அது மாத்திரமன்றி அவர் தனது நிலையை உணர்ந்த நிலையிலேயே தனது வாரிசாக தனது மகனை அரசியலில் அறிமுகம் செய்தும்

இருக்கிறார்.

கூட்டமைப்பு அரசியல்வாதிகளைப் பொறுத்த வரையில் தற்போதைய நிலையில் நிதானமாகச் சிந்தித்து கருத்துகளைத் தெரிவிப்பதில் கெட்டிக்காரர்களாக இரா. சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரே விளங்குகின்றனர். இருவருமே சட்டத்தரணிகள் என்பதற்கு அப்பால், இவர்கள் பிறமொழி அறிவிலும் சிறந்து விளங்குகின்றனர். இக்கட்டான ஒரு சூழலில் தம் முன்னால் உள்ள தடைகளைச் சமாளித்து வெற்றிக் கொடி நாட்டக் கூடிய போர்க்குணமும், பிடிவாதமும் இருவரிடமும் காணப்படுகின்றது.

சுமந்திரனைப் பொறுத்தவரை ஒரு சட்ட ஆலோசகராகவே அவர் கட்சி அரசியலுக்கு அறிமுகமானார். தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக அவர் செயற்பட்ட போது 'மக்கள் செல்வாக்கு இல்லாதவர்' எனப் பரிகசிக்கப் பட்டார். இதன் விளைவாக கடந்த தேர்தலிலே யாழ் மாவட்டத்தில் போட்டியிட்டு பெரு வெற்றி பெற்றார். அவர் தேர்தலில் போட்டியிட முன்வந்தபோது அவரது கட்சியைச் சேர்ந்தோர் மத்தியில் கூட அவரது வெற்றி தொடர்பாக அவநம்பிக்கை நிலவியது. ஆனாலும் அவர் சாதித்துக் காட்டினார்.

தற்போது தலைமைப் பதவிக்கு அவர் குறிவைத்து உள்ளதாக அவரது அரசியல் எதிரிகள் கூறி வருகின்றனர். சவால்களை எதிர்கொள்வதில் சமர்த்தரான சுமந்திரன் வாய்ப்பு வரும்போது இந்தச் சவாலையும் எதிர்கொண்டு வெற்றி பெறுவார் என நிச்சயம் நம்பலாம்.

ஆனால், இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்கொள்ளும் சவால்களை வெறுமனே தலைமை மாற்றத்தின் ஊடாக மட்டும் வெற்றி கொண்டு விட முடியுமா? என்ற கேள்வி எழுகின்றது. கடந்த உள்ளாட்சித் தேர்தலில் கட்சி ஒரு சறுக்கலைச் சந்தித்தமை ஒன்றும் இரகசியமான விடயமல்ல. பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கத்தில் இருந்து முக்கிய தலைவர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், என். ஸ்ரீகாந்தா போன்றோர் பிரிந்து சென்று, தனிக்கட்சி தொடங்கியமையால் யாழ் மாவட்டத்தில் கூட்டமைப்பின் வாக்கு



# Swiss Life
## Select

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனசாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே...! அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.

**சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே!**

**அவதானமாகச் செயற்படுங்கள்.**

உங்கள் கடனுக்காக வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங்கோர்க்கும் ஒரேயொரு நிறுவனம்

**அறிவு • நேர்மை • நாணயம்**

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின் முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து தருகிறோம்

**Sägestrasse 79**
**3098 Köniz**

**Telefon: 031 915 00 50**
**Telefax: 031 915 00 60**
**Handy: 079 889 60 65**

email : krishnasamy.thileepan@swisslife-select.ch
internet : www.swisslife-select.ch

Cicero Member ID 15787
www.cicero.ch
So fängt Zukunft an.



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF


















வங்கியில் நிச்சயமாக சேதம் ஏற்படவே செய்யும். தவிர, யாழ் மாவட்டத்தில் செல்வாக்கு மிக்க தலைவர்களுள் ஒருவரான விந்தன் கனகரட்ணம் அவர்களும் கட்சியை விட்டு வெறியேறி உள்ளார். அவர் வேறு எந்தக் கட்சியும் சேராத போதிலும், இதுவும் கூட கூட்டமைப்பின் வாக்கு வங்கியில் சேதாரத்தை ஏற்படுத்தவே செய்யும்.

திருகோணமலை மாவட்டத்தில் இரா. சம்பந்தன் தேர்தலில் போட்டியிடாது விட்டால், யார் அந்த இடத்தைப் பிரதியீடு செய்வார்கள்? என்ற கேள்வி எழுகின்றது. அவரைப் போன்ற ஆளுமையுடன் கூடிய வேறு எவரும் கட்சியில் தற்போது அங்கே இல்லை என்பதே யதார்த்தம்.

மட்டக்களப்பைப் பொறுத்தவரை இம்முறை பலமுனைப் போட்டி நடைபெறுவதற்கான வாய்ப்பே இருக்கிறது. 'முஸ்லிம் மக்களுக்கு எதிரான உணர்வு நிலை' அதிகரித்துள்ள நிலையில் தேர்தல் எவ்வாறு இருக்கப் போகின்றது? என்ற கேள்வி எழுகின்றது. கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ச. வியாழேந்திரன், முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் அணியில் இடம்பிடித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்த மூர்த்தி ஆகியோர் எதிரணியில் நிற்கும் போது தமிழ் மக்களின் வாக்குகள் சிதறுண்டு போவதற்கான வாய்ப்புகளே அதிகம் தென்படுகின்றன.

அனைத்துக்கும் மேலாக, கடந்த நல்லாட்சி அரசாங்க காலகட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வகிபாகம் தொடர்பில் விடையிறுக்கப்படாத கேள்விகள் தமிழ் மக்கள் மத்தியில் ஏராளமாக உள்ளன. புதிய அரசியலமைப்பு, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு, காணாமற் போனோர் விவகாரம், காணிகள் விடுவிக்கப்படாமை போன்றவை முதல் இறுதியாக இடம்பெற்ற கல்முனை தமிழ்ப் பிரதேச செயலக விவகாரம் வரையான பல்வேறு விடயங்களுக்கு விளக்கம் தரவேண்டிய கடப்பாடு கூட்டமைப்புக்கு உள்ளது.



கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பில் தற்போதைக்கு மாற்றம் எதுவும் இடம்பெற வாய்ப்பில்லை என மீண்டும் மீண்டும் கூறப்படுகின்றது. அவ்வாறான சூழல் ஒன்று இருப்பதாக மீண்டும் மீண்டும் கூறுவது கூட, கூட்டமைப்பின் கவனத்தை தேர்தல் நோக்கிக் குவிய விடாமல் செய்யப்படும் தந்திரமோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

இலங்கைத் தீவில் சிங்களப் பேரினவாதம் மீண்டும் எழுச்சி பெற்றுள்ள நிலையில் அதன் விளைவை எதிர்நோக்கும் இடத்தில் உள்ள தமிழ் மக்களிடையே ஒற்றுமை இல்லாத நிலை நீடிப்பது கவலைக்கு உரியது. அத்தகைய ஒற்றுமை உருவாவதற்கான அறிகுறிகள் கூடத் தென்படாமை தமிழ் மக்களின் தலைவிதி என நொந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

Swiss, Zürich மாநிலத்தில் புதியதோர் உதயம்

# வரசித்தி மஹால் மண்டபம்

**சகலவிதமான மங்கள வைபவங்களை மகிழ்ச்சியாகவும், தரமாகவும், நேர்த்தியாகவும் உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில் அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில் மனம் கவர்ந்த ஒரே அழகிய மண்டபம்...**


திருமண விழா, நீராட்டு விழா, பிறந்தநாள் விழா அனைத்து வைபவங்களுக்குமான சைவ, அசைவ உணவு வகைகளை அறுசுவையுடன் சுவிஸின் அனைத்து பாகங்களுக்கும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்



**800 இருக்கை வசதியும்**
**400 வாகன தரிப்பிடமும்**
**கொண்ட மண்டபம்**


**Hüttenwiesenstrasse 6, 8108 Dällikon, Zürich, Switzerland**

K.KOWTHAMAN
079 317 82 36

S.MANIVANNAN
079 128 55 61

K. VIJAYASURESH
079 275 68 62

web : www.varasithy-mahall.ch mail : vasasithymahall@hotmail.com




# தனித் தமிழ் ஈழம்?

சிங்களக் கட்சிகளின் தலைமைக்கு எப்போதெல்லாம் தேவை ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் அரசமைப்புச் சட்டத்தின் மேல் கை வைப்பார்கள். அரசியல் அமைப்பைத் திருத்தும் போதெல்லாம் தமிழ் தலைமைகளின் கால்களில் விழாத குறையாக வாக்குறுதிகள், இலஞ்சங்களை வாரி வழங்கி, தமது தேவைகளை நிறைவேற்றி விடுவார்கள்.

இதிலே இரகசியம் என்னவென்றால், பதவிகளை பெற்று விட்டதால் ஜீ.ஜீ. தமது அரசியல் வாழ்வைத் தொலைத்துவிட நேர்ந்த காரணத்தால், அதே தவறை தமிழரசுக் கட்சித் தலைமை செய்ததில்லை. மாறாகக் காதும் காதும் வைத்தது போல ரொக்கமாக, அவரவர் வங்கிகளின் இரகசியக் கணக்கிலே வைக்கப்பட்டு விடும். யாரும் யாரையும் விலைபோய் விட்டதாக தேர்தல் மேடைகளில் பேசி, மக்களின் வாக்குகளைப் பறித்துவிட முடியாது.

இன்றுவரை தமிழரசுக் கட்சி மற்றும் தமிழர் தேசியக் கூட்டமைப்பினர் கறைபடாத கண்ணிவான்களாக மக்கள் முன் உலாவந்து, மக்களின் வாக்குப் பலத்தைக் காப்பாற்றி வர, இத்தகைய அரசியல் வியாபாரம்தான் உதவுகிறது. எவ்வளவு கிடைச்சது? யாருக்கு எவ்வளவு கொடுத்தது? போன்ற விபரங்கள் சிதம்பர ரகசியமாகவே இருப்பதற்கு கொடுத்த வரும், வாங்கியவரும் சொல்ல முடியாது, சொல்ல மாட்டார்கள்.

இந்த விபரங்கள் வெளியாருக்குத் தெரிய வரும் வரை எல்லாரும் யோக்கியர்களே!. இருந்தும் கூட சில வருடங்களுக்கு முன்னர் இந்திய அரசிடமிருந்து கிடைத்தத் தொகையில் சரியான பங்கு தமக்குத் தரப்படவில்லை என்கிற முறைப்பாடு பொதுச் செய்தி அரங்கில் வெளிவந்ததும், அது தொடர்பான பதிலை குறித்த கட்சியின்

தலைவர் கொடுத்திருந்தார் என்பதும் நினைவு கூறத் தக்கதே!.

இத்தகைய அரசியல் சூதாட்டங்களால் தமிழினம் தனது தாயாகப் பிரதேசங்களையும், தமிழ் மக்களையும் படிப் படியாகச் சிங்கள மயமாக்கலுக்குத் துணைபோய், இன்று முழுமையான அழிவின் விளிம்பில் மகிந்த ரணில் கோட்ட பாயாக்களின் கரங்களில் சிக்கி, மடிந்து கொண்டிருக்கிறது.

இத்தனையும் 1830களில் பிரித்தானிவிடம் தமிழ் வன்னிமை, யாழ்ப்பாண அரசுகள், கண்டி அரசுகள் வீழ்ச்சி உற்ற காலம் முதல் 2009ல் தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழீழ மக்கள் இனஅழிப்பு வரை பிரித்தானிய,இந்திய, ஐரோப்பிய, அமெரிக்க அரசுகளே உதவின. சிங்களத்தின் பேரினவாத புத்த மத வெறி அரசுகளுக்கு படைக்கல நேரடி படைப் பயிற்சி, மற்றும் நிதிப் பங்களிப்புகளை வழங்கி, தமிழ் இனத்தின் மீது பிரகடனப் படுத்தப் படாத இன அழிப்புப் போரை நடத்தின.

அத்தோடு மட்டும் நின்று விடாமல், சர்வதேச சட்ட விதிகளை மீறி, இழைக்கப் பட்ட போர்க் குற்றங்கள் பற்றிய நீதி விசாரணையோ, தமிழரின் சொத்துகள், உயிர் சேத இழப்பீடுகளையோ தமிழினம் பெறுவதை தடுத்து வருகின்றன. இதில் நாம் மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில், 1948 தொடக்கம் இந்திய வம்சாவழித் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப் பட்டமை தொடக்கம், இந்திய அரசுகள் தமிழின வெறுப்புக் கொள்கைகளையே, சிங்கள இனமதவெறி அரசுகளுக்கு அனுசரணையாகக் கடைப்பிடித்து வருகின்றன.

2009 போர் உட்பட இன்றைய தேதி வரை ஆதரவாகவும் செயற்பட்டு, தமிழின அழிப்பில் பங்கேற்று வரும் இந்திய, அமெரிக்க, பிரித்தானிய, ஐரோப்பிய அரசுகளின் இத்தகைய கபட செயற்பாடுகளைத் தோலுரித்துக் காட்டி, சர்வதேசப் போர்க்குற்ற நீதிமன்றங்களில்



# IMPORTAS
Cash & Carry

தாயக உணவு வகைகள் உட்பட அனைத்து உணவு
வகைகளையும் உயர் தரத்தில் மிக மலிவாகவும்
நீங்கள் நம்பிக்கையோடு நாட வேண்டிய ஒரே இடம்...



## பேர்ண் நகரில்
# புதிய உதயம்

வாடிக்கையாளர்களின் ஏகோபித்த
வேண்டுகோளுக்கிணங்க 30 வருடங்களாக
தமிழர்களின் அபிமானம் வென்ற
“இம்போட்தாஸ்” நிறுவனம் பேர்ண் மாநகரில்
தனது கிளையை திறந்து வைக்கின்றது

**Kranichweg 8, 3074**
**Muri Bei Bern**
**☎ 031 951 24 44**

Subash · Rubicon · Renuté · PG tips · Patak's · Niru · Nestlé
Maggi · Kings · Gits · Elakkia · TRS · Thai Pride · Suryaa

Baslerstrasse 102, 8048 Zürich - Switzerland
Tel : +41 43 343 03 55  Fax : +41 43 343 03 56
email : info@importas.ch  Web : www.importas.ch

எம் இனத்துக்கான நீதியையும், தாய் மண் மீட்பையும் செய்வதற்குப் பதிலாக, எம்மை அழித்தவனின் காலடியில் நீதி கேட்கும் எமது தலைவர்கள் நிலையை காட்டும் இந்தப் படத்தைப் பாருங்கள்.

உலகில் நன்கு அறியப்பட்ட பல கொலைகள், வெள்ளை வான் ஆட் கடத்தல்கள், மனித உரிமை மீறல்கள் காரணமாக சர்வதேச நீதி மன்றங்களால் தேடப்படும் குற்றவாளிக்கு, இப்படியான ஒரு கனவானின் முகத்தைக் காண்பிக்க உதவும் தமிழர் தலைமைகளை, மிக வன்மையாகக் கண்டிக்காமல் தமிழ் மக்கள் இருந்து விடக் கூடாது.

சிங்களத்தின் தமிழின அழிப்புக்கு முடிவு கட்ட வேண்டும் என்றால், எமது விடுதலைப் போரைத் சர்வதேச போர்க் குற்ற நீதி மன்றத்துக்கு எடுத்துப் போய் போராடுவதில் இனிமேலும் தாமதம் கூடாது. ஒரு சிங்கள மனித உரிமைச் செயற்பாட்டாளரான கலாநிதி . யூட் லால் பர்ணாந்து அவர்களே அயர்லாந்திலும் யேர்மனியிலும் உள்ள நிரந்தர மக்கள் தீர்ப்பாயங்களில் வழக்குகளைப் பதிவு செய்து அமெரிக்க பிரித்தானிய அரசுகளைக் குற்றவாளிகளாகத் தீர்ப்புகளைப் பெற்ற நிலையில் நாம் தொடர்ந்தும் இந்திய அமெரிக்க பிரித்தானிய அரசுகளின் தயவால் நீதியைப் பெறலாம் எனச் சிந்திப்பதும் பேசுவதும் முட்டாள்தனமும் அயோக்கியத் தனமும் என்பதை பகிரங்கப்படுத்திக் கண்டிக்காமல் எமக்கான நீதியைப் பெறமுடியாது என்பதை இங்கு அகரம் பதிவு செய்கிறது.

எமது இத்தகைய கோரிக்கையை நியாயப் படுதவும் வலுச்சேர்க்கும் வகையிலும் மியன்மார் அரசுக்கு எதிராக ரோகிங்கிய இஸ்லாமிய மக்கள் மீது மியன்மார் தேரவாத புத்த பிக்குகள் நடத்திவரும் இன வன்முறைகளை எதிர்த்து கம்பியா தேசம் சர்வ தேச நீதி மன்றத்தில் கம்பியா தேசம் தொடர்ந்த வழக்கின் தீர்ப்பு எமக்கும் ஒரு புதிய வழியை வகுத்து விட்டதை பல அரசியல் ஆய்வாளர்களே சுட்டிக் காட்டி வருகிறார்கள்.

அந்த வழக்குத் தீர்ப்பின் சாராம்சம் இதுதான்.

''கம்பியாவுக்கு மியன்மார் பிரச்சினையில் இனஅழிப்பு பிரகடன கடப்பாடுகள் மீறல்களை சமர்ப்பிக்க முதற்கட்ட நிலை யைச் சமர்ப்பிக்க முடியும் என இந்த மன்று முடிவு செய்கிறது.'

மேலும் அந்த நீதி மன்றத் தீர்ப்பில் 'இனஅழிப்பு பிரகடனத்தின் எந்த ஒரு அரசுத் தரப்பும் குறிப்பாகப் பாதிக்கப்பட்ட தரப்பு மட்டும் அல்லாமல் எந்த ஒரு நாடும் மற்றொரு தேசத்தின் பொறுப்பு மீறலை உறுதிப்படுத்தும் வகையில் ஒரு தரப்பின் கடப்பாடுகளை மீறுவதை முடிவுக்கு கொண்டு வர முடியும்.''

அவசியமான தொடர்ந்த ***The Court also stated that "any State party to the Genocide Convention, and not only a specially affected State, may invoke the responsibility of another State party with a view to ascertaining the alleged failure to comply with its obligations erga omnes partes, and to bring that failure to an end."***

இன்று இலங்கை ஒரு இனவெறி எகாதிபத்தியத்தை நோக்கி நகரம் வேளையில் நாம் இன்னமும் இந்தியா அமெரிக்கா பிரித்தானியா எனக் கொலையாளின் பின்னால் அலைந்து இனமாக அழிந்து போவதை விட 'இன அழிப்பு பிரகடன்தில் கையொப்பமிட்ட எந்த ஒரு நாட்டினையாவது அணுகி எமது பிரச்சினைக்கு முடிவு தேட எமது செயற்பாட்டாளர்கள் முற்பட வேண்டும்.

தனித் தமிழீழத் தாயக மீட்பு ஒன்றுதான் தமிழினத்தை இன அழிவிலிருந்து காப்பாற்ற முடியும்.

**தேடல் தொடரும்**




GENERALI

**Mathan Selvaratnam**
**Versicherungs - und Vorsorgeberater**

Monbijoustrasse 29, 3001 Bern
058 473 24 45   058 473 32 29
email : mathan.selvaratnam@generali.com
www.generali.ch

www.generali.ch
076 / 303 22 16

## PRIVATKUNDEN & FIRMENKUNDEN | தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிற்கும்

### வருமானக்காப்புறுதி
### EINKOMMENS - VERSICHERUNGEN
வேலை இழக்க நேரிட்டால் உங்கள் 100% வருமானத்தையும் பெற்றுக்கொள்ள இலகுவழி

### சேமிப்புக்காப்புறுதி
### SPARVERSICHERUNGEN
சிறுவர்கள் முதல் பெரியர்கள் வரை அனைவருக்குமானது

### ஆயுட்காப்புறுதி
### LEBENSVERSICHERUNGEN
உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாத்திட

### வாகனக்காப்புறுதி
### FAHRZEUGEVERSICHERUNGEN
உங்கள் வாகனத்திற்கு தேவையான அனைத்து காப்புறுதிகளும்

### வீட்டுக்காப்புறுதி
### HAUSRAT, GEBÄUDE & HAFTPFLICHTVERSICHERUNGEN
சொந்த, வாடகை வீடுகளிற்கு அவசியமான காப்புறுதி

### சட்டக்காப்புறுதி
### RECHTSSCHUTZVERSICHERUNG
ஒவ்வொரு சட்டம் சார்ந்த தேவைகளிற்கும் அவசியமானது

### மருத்துவக்காப்புறுதி
### KRANKEN & UNFALLVERSICHRUNGEN
அனைத்து விதமான மருத்தவ சேவைகளிற்கும் தேவையான சிறந்த காப்புறுதி

### வீட்டுக்கடன்
### HYPOTHEKEN
உங்கள் சொந்த வீட்டுக்கனவை நனவாக்கிட சிறந்த சேவை

எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளவும்





சுவிஸ் நாட்டில் அனைத்தின மக்களினதும் நம்பிக்கைக்குரியதும் இலாபம் தரவல்லதும் எமது நிறுவனம்

# என்ன கொடுமை சரவணா!...



கல்லெறி வேலுப்பிள்ளை

**வணக்கம் பாருங்கோ, எப்பிடி இருக்கிறியள்?**

**நான் ஏதோ இருக்கிறன் பாருங்கோ. பொங்கல் வந்தால் தை என்றும், நத்தார் வந்தால் மார்கழி என்றும் தெரிஞ்சுகொள்ளுற அளவுக்கு இன்னும் அறிவிருக்கு கண்டியளோ. அதால கொஞ்சம் இந்தச் சமூகத்தில தலை காட்டக்கூடியதாக இருக்கு பாருங்கோ. மற்றும்படி படி பல்கலைக்கழகம் போய் கற்றுவாற அளவுக்கெல்லாம் எனக்கு வசதி வாய்ப்பு இருக்கேல்லை பாருங்கோ.**

எங்கட சமூகத்தில இருக்கிற பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கிற அளவுக்கு தைரியம் இருந்தால் போதும் பாருங்கோ. தைரியம் இல்லாத அளவுக்கு வாழ்க்கை தற்கொலைக்குச் சமம், அதனாலதான் சமூகத்தில உருவாகிற அநீதிகளுக்கு முகம் கொடுக்கிற அளவுக்கு நான் கொஞ்சமாவது இருக்கிறன் கண்டியளோ. இல்லையெண்டால் இருந்த இடம் தெரியாமல் அல்லே போயிருப்பம்.

போனமாதம் தான் உங்கின அயல் நாடொன்றுக்குப் போய் வந்தன் பாருங்கோ. அங்க போன இடத்தில கவனிப்பு எல்லாம் தடல் புடலா இருந்திச்சு. ஒரு திருமண நிகழ்வு ஒன்றுக்குப் போயிருந்தன். ஆனால் திருமணம் நடக்கேல்லை. என்னடா இது புதுகோதாரி எண்டு கேக்குறியளோ ..? அதுதான் பாருங்கோ நானே குழம்பிப்போய் இருக்கிறன். திருமணத்திற்கு என்றுதான் அழைப்பு வந்தது. அங்க போனால் அது தலைகீழாகப் போட்டுது. முன்ன பின்ன பேசிச் செய்யுற திருமணங்களில ஒரு நியாயம் இன்னமும் இருக்கத்தான். செய்யுது பாருங்கோ.

விடயம் என்னவெண்டால், என்னுடைய உறவுமுறை மைத்துனர் எண்டபடியால எனக்கு அழைப்பு வந்தது. கன காலமாக தொடர்பு இல்லாமல் இருந்ததால அவர் எங்க இருக்கிறார் எண்ட விவரம் எனக்குத் தெரியாமல் போட்டுது. பிறகு அவர்தான் ஒருமாதிரி நான் இருக்கிற இடத்தைக் கேள்விப்பட்டு தொலைபேசியில கதைச்சு திருமணம் எண்ட விவரம் தந்தார். மைத்துனருடைய மகளுக்குத்தான் திருமணம். பெரிசா விழா எடுத்து கொண்டாடுற மாதிரி திட்டங்கள்

போட்டு, வந்த ஆக்களுக்கெல்லாம் விடுதிகளில் தங்குமிட வசதி செய்து கொடுக்கிற அளவுக்கு அவையள் காசுக்கார் தான். ஆனால் காசால எல்லாத்தையும் சரிப்படுத்த இயலாது தானே பாருங்கோ.

விசயம் என்னவெண்டாப் பாருங்கோ, பிள்ளையளுக்கு திருமண ஒழுங்கு செய்யும் போது, முந்தியெல்லாம் உனக்கு காதல், கருமாதி ஏதும் இருக்கோ எண்டு கேக்குறது தானே வழமை, ஆனால் இப்பவெல்லாம் அது மாறிக்கொண்டு வருக்குது. உனக்கு ஏற்கனவே கலியாணம் ஏதும் நடந்ததோ எண்டு கேட்டு முதலில தெரிஞ்சுகொள்ள வேணும் போல கிடக்கு. அப்பிடி போகுது இளசுகளின்ர வாழ்க்கை. ஊருக்குத் தெரியாமல் திருமணம் செய்தாப்பிறகு, அதைத் தாய் தகப்பனுக்கு கூட சொல்லாமல் இருக்கிறது எவ்வளவு பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும் எண்டுறது இந்தக் கலியாணத்தில தான் பாருங்கோ எனக்குத் தெரிஞ்சது.

தன்னுடைய பிள்ளைக்கு தாயத்தில இருந்துதான் மாப்பிள்ளை வரவேணும் எண்டு மகள் சின்னவயசில இருக்கும்போதே மைத்துனர் சொல்லுறவர். அதெல்லாம் அந்தநேரம் பார்க்கலாம் எண்டு நானே சொல்லி இருக்கிறேன் பாருங்கோ. ஏன் எண்டால் பிள்ளையள் வளருற சூழல் தானே அதைத் தீர்மானிக்கிறது. அதே மாதிரித்தான் இப்பவும் நடந்தது கண்டியளோ. மைத்துனர் ஊரில மகளுக்கு மாப்பிள்ளை பார்க்க, மகள் ஏற்கனவே இங்க ஒரு பையனை விரும்பியிருக்கிறா போல கிடக்கு. ஆனால் தகப்பனின்ர ஆசை நினைச்சும் பயம் இருந்திருக்கு. எங்கட தாய் தகப்பனுக்கும் ஒரு அதிசயக்குணம் இருக்குது பாருங்கோ.

என்னவெண்டால் தங்கட விருப்பத்தின் படி பிள்ளையள் திருமணம் முடிக்காட்டி, நாங்கள் தற்கொலை செய்வம் எண்டு பிள்ளையளை வெருட்டுறது. அது முந்தி ஊரிலதான் இருந்ததெண்டு நினையாதேங்கோ. அது இங்கயும் இப்பவும் நடக்குது. அதே மாதிரி இந்தப் பிள்ளையும் தகப்பன் ஏதும் செய்து போடுவர் எண்டு பயத்தில கடைசிவரை தன்னுடைய விருப்பத்தைச் சொல்லவே இல்லை கண்டியளோ.

பிள்ளைக்கு மைத்துனர் ஊரில பார்த்த பெடியன் ஒரு முன்னாள் போராளி. கையில ஒரு விழுப்புண் இருக்குது. ஆனால் நல்ல பெடியன். அந்தப்பெடியன் என்னுடைய மைத்துனரை மாமனாராகப் பார்க்கேல்லை. ஒரு தகப்பனாகவே பார்த்திருக்கு. எல்லாத்தையும் சொல்லி இருக்குது. அதில ஆளுக்கு வெகு சந்தோசம். உடன தடல் புடலா







மைத்துனர் திருமண வேலைகளை பார்க்க வெளிக்கிட்டுட்டார். இதுக்குள்ள பிள்ளைக்குள்ள பெரிய போராட்டம்.

எப்பிடி அப்பாவுக்கு தன்னுடைய விருப்பத்தைச் சொல்லுறதெண்டு. ஏன் எண்டால் சொன்னால் அப்பா மனமுடைஞ்சு போவார் என்ற பயம் பிள்ளைக்கு. ஆனால் அதை முதலே சொல்லி இருந்தால், அப்பாவின்ர மனசு உடையுறதை விட, ஒரு போராளியின்ர மனசு உடையுறதைக் காப்பாற்றி இருக்கலாம். போராளியா இருந்தவர்கள் ஏற்கனவே தம்மை நாட்டுக்காக அர்ப்பணித்தவர்கள். காதல் செய்ய வேண்டிய வயசில, தாயக மண்ணைக் காதலித்த பெடியள். தங்கட மண்ணை இழந்து எவ்வளவு வேதனைக்குட்பட்டு இருப்பார்கள் என்பதை எழுத்தில் வடிக்க இயலாது.

அப்படிப்பட்டவர்களுக்கு அமையும் வாழ்க்கை உண்மையில மகிழ்வாக அமையவேணும். ஆனால் இங்க நடந்ததோ வேற. அதுக்கு முழுக்காரணமும் மைத்துனரின்ர மகள் எண்டு சொல்ல இயலாது. மைத்துனரும் ஒரு காரணம். பிள்ளையளிட்ட எங்கட ஆசையளைத் திணிக்கக் கூடாது. அதை அவர் உணரேல்லை பாருங்கோ. மகளும் நேரத்தோடயே கொஞ்சம் தகப்பனுக்கு சொல்லி இருக்கலாம். இரண்டு பேரின்ர பிடிவாதத்தால ஒரு பெடியனின்ர வாழ்க்கை குழம்பிட்டுது பாருங்கோ. திருமணத்துக்கு மூன்று மாதம் இருக்கமுதல் பெடியன் வேற வழியால வெளிநாட்டுக்கு வந்திட்டுது.

யாரோ நண்பர்களின்ர உதவியோட வந்த பெடியன், தன்னுடைய வருங்கால மாமனாருக்கும் அறிவிச்சிருக்கு. ஆனால் பொம்பிளை வீட்டுக்காரர் முறையாக அழைக்கும் வரை தான் அங்க போறது அவ்வளவு நல்லதில்லை எண்டு பேசாமல் இருந்திட்டுது. அந்த நேரம் பார்த்து, தகப்பன் மைத்துனரை வீட்டை கூப்பிட்டு விருந்துபசாரம் குடுக்க வேணும் எண்டு ஆசைப்பட்டிருக்கிறார். அப்ப பார்த்துதான் இலேசா மகள் தனக்கு திருமணத்தில விருப்பம் இல்லை எண்டு வாய்திறக்க, மைத்துனர் கடுப்பாகிட்டார்.

அதோட விடாமல், பழைய

காலத்துப் பல்லவியையும் பாடி இருக்கிறார் போல கிடக்கு. வேற என்ன, நீ இந்தத் திருமணத்திற்கு சம்மதிக் காட்டில் நான் தற்கொலை செய்வன் எண்ட அதே பல்லவிதான் பாருங்கோ. இப்ப மகளுக்கு வழி தெரியேல்லை, தகப்பனைச் சமாளிக்க வழி தெரியேல்லை. உடன கொஞ்சம் குறுக்கால யோசிச்சிருக்கிறா போல கிடக்கு. நேர அந்தப் பெடியனைக் கண்டு, தனக்கொரு காதல் இருக்கெண்டு சொல்ல வெளிக்கிட்டிருக்கிறா.

ஒரு மாதிரி பெடியனைக் கண்டு பிடிச்சு, விசயத்தைச் சொல்ல பெடியனுக்கு ஒண்டும் விளங்கேல்லை. இதென்னடா தகப்பன் கலியாணம் பேசுறார், மகள் தன்னுடைய காதலைச் சொல்லுறா எண்டு ஆளுக்கு ஒரே குழப்பம் . சரி, இப்ப நான் என்ன செய்யவேணும் எண்டு பெடியன் அந்தப் பிள்ளையைக் கேட்டிருக்கு . ஏனெண்டால் அவங்களுக்கு கலங்கிச் சாயுற அளவுக்கு இது பெரிய விசயம் இல்லை. எத்தனையோ நண்பர்களின்ர சாவுகளைக் கைகளில் தாங்கிய பிறவிகள்தானே போராளிகள். ஒரு சாதாரண திருமணம் குழம்பிறதால கலங்கப் போற ஆக்கள் இல்லை அவர்கள். ஆனால் உந்தப் பிள்ளை கேட்ட உதவி தான் பிரச்சனையான உதவி பாருங்கோ.

அதாவது; பெடியன் தன்னுடைய தகப்பனிட்டப் போய், உங்கட மகளைத் திருமணம் செய்ய எனக்கு விருப்பம் இல்லை எண்டு சொல்லச் சொல்லிக் கேட்டிருக்கிறா. பெடியன் குழம்பிட்டுது. உங்கட குடும்பப் பிரச்சனையை தீர்க்க நான் பலிக்கடா ஆகுறதோ எண்டு கேட்டிருக்கு. நீங்கள் என்னை காப்பாற்றாட்டில் நான் தற்கொலை செய்திருவன் எண்டு இவவும் ஒரு மிரட்டல் படலத்தை பெடியனுக்குச் சொல்லி இருக்கிறா. இயலாக்கட்டத்தில பெடியன் அதுக்குச் சம்மதிச்சிட்டுது.

அந்த வேளையில பெடியனின்ர பெரியம்மா ஊரில காலமாகிவிட, பெடியனுக்கு என்ன செய்யுறதெண்டே தெரியேல்லை. தன்னை வளர்த்த தாயின் முகத்தைப் பார்க்கக்கூட முடியேல்லை எண்ட கவலை ஆளுக்கு. அந்தக் குழப்பத்தில ஒரு கிழமை போட்டுது




பாருங்கோ. கடைசியா ஒரு மாதிரி பெடியன் மனசைத் தேற்றிக்கொண்டு, என்னுடைய மைத்துனரிட்ட வந்து, எனக்கு உங்கட மகளைத் திருமணம் செய்யுறதில உடன்பாடு இல்லை எண்டு சொல்லி இருக்குது.

மைத்துனர் எகிறி அடிச்சு, குதிச்சு கத்திக் குளறி, உனக்கெல்லாம் என்ர மகள் கிடைக்கக் குடுத்து வைக்க வேணும். நீயெல்லாம் ஒரு போராளியோ எண்டெல்லாம் கதறி அடிச்சிருக்கிறார். போராளி எண்டால் எதையும் தியாகம் செய்ய வல்லவன் எண்டு பொருள் எண்டதை மைத்துனர் ஒரு நொடியிலே மறந்திட்டார். மகளில இருந்த பாசம் மைத்துனருக்கு கண்ணை மறைச்சிட்டுது. நீ இஞ்ச வந்த உடனே, வேற யாரையோ பார்த்திட்டாய் எண்டு வேற கத்தியிருக்கிறார்.

பெடியன் உதுக்கு என்னத்தைச் சொல்ல முடியும்..? இதுதான் என்ர கடைசி முடிவு எண்டு பெடியன் சொல்லிப் போட்டு வெளியேறிட்டுது, ஆனால் மைத்துனருக்கு இப்ப கடும் ஆத்திரம். நம்பிதானே திருமண மண்டபம் தொடங்கி, அழைப்பிதழ் வரைக்கும் காசு குடுத்தனான். உவங்களை எல்லாம் எப்பிடி போராட்டத்தில வைச்சிருந்தாங்கள் எண்டு புலம்ப வெளிக்கிட்டுட்டார். நான் அங்க ஒரு கிழமைக்கு முதலே போட்டன் பாருங்கோ. எனக்கு வேற அலுவலும் இருந்ததால, முன்னமே போட்டன்.

அங்க போனால் திருமணம் தலைகீழ். எல்லாரும் என்னடா எண்டால், கட்ட இருந்த பெடியன் வேண்டாம் எண்டுட்டு தாம் எண்டு தான் கதை. ஆனால் பெடியனின்ர கதை எனக்குத் தெரிய வேண்டி வந்தது, அந்தப் பெடியன் வேலைசெய்த இடத்தின்ர முதலாளியால பாருங்கோ. அவரும் ஒரு தமிழர் தான். அவர் முழு விசயத்தையும் சொல்ல, நான் பெடியனோட கதைச்சால், நான் என்ன செய்யுறது நீங்களே சொல்லுங்கோ எண்டு என்னைக் கேக்குது..? எனக்கு என்னத்தைச் சொல்லுறதெண்டு தெரியேல்லை.

இனி என்ன, எல்லாம் நடந்து முடிஞ்சுபோச்சுது. மைத்துனர் அந்தப் பெடியனைத் தூற்றித் திரியுறாராம் எண்டு கேள்வி. எல்லாத்தையும் நாட்டுக்காகத் தியாகம் செய்துபோட்டு இன்னும் எத்தனை பேரின் தூற்றலுக்கு ஆளாகினம் உந்தப் பாவப்பட்ட போராளிகள் பாருங்கோ. நான் மைத்துனரின்ர வாயை மூடுவம் எண்டு பார்த்தால், பெடியன் விடுகுதில்லை.

அவரின்ர மகளில அவர் அளவுக் கதிகமான பாசம் வைச்சிருக்கிறார். அதை நாங்கள் ஏன் குழப்பவேணும்..? அவர் என்னைத் தூற்றித்திரியுறதால எனக்கு எந்த நட்டமும் வரப்போறதில்லை. எப்பயோ ஒரு நாளைக்கு மகளின்ர விருப்பத்துக்கு அவர் திருமணம் செய்து வைக்கத்தானே வேணும். அப்ப மகள் சந்தோசமா இருப்பா தானே எண்டுது பெடியன்.

இந்தக்காலத்தில பலவிதமான தூற்றலுக்கு ஆளாகினம் போராளிகள், அதில இதுவும் ஒரு வகை தான் என்று பெருமூச்சு விடுறதைத்தவிர எனக்கு வேற வழி தெரியேல்லை பாருங்கோ..

**மனிதன் என்பவன் தெய்வம் ஆகலாம்**
**வாரி வாரி வழங்கும் போது**
**வள்ளல் ஆகலாம்**
**வாழை போல தன்னை தந்து**
**தியாகி ஆகலாம்**
**உருகி ஓடும் மெழுகு போல**
**ஒளியை வீசலாம்**
**ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம்**
**சிலைகள் ஆகலாம்**
**உறவுக்கென்று விரிந்த உள்ளம்**
**மலர்கள் ஆகலாம்**

**- அப்ப வரட்டே**



**அவனா? இவன்!**

# ஆண்டானும் அடிமைகளும்

## தமிழ் இனமே இப்படித்தான் வீழ்ந்தாயா?

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இராஜவரோதயன் சம்பந்தனுக்கும், அவனுக்கும் ஒரு சில வருடங்களே வித்தியாசம். ஆனால் அவன் வளர்ந்து வந்த பாதைக்கும், அவருடைய வசதி மிக்க வாழ்க்கைப் பாதைக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள இடைவெளி. அவருடைய தந்தையோ தமிழினத்தின் தலைவராக தமிழரசுக் கட்சியின் அரசியல் அறப் போராட்டங்களைத் தலைமை தாங்கி நடத்தியவர்.

அத்தகைய தலைவரின் உதிரத்தில் தோன்றிய சம்பந்தன், எத்தகைய பணிவோடு இலங்கை அதிபர் கோட்டபாயா முன்பாக கைகட்டி, வாய் மூடி மௌனியாக நிற்கும் காட்சியைக் காண, “இப்படியான புழுப் பூச்சியையா தமிழினம் தனது தலைவராக வைத்து, தனது உரிமைப் போரை அவரிடம் வழி நடத்த ஒப்புவித்தது” என்கிற வியப்பே அவனை தாக்கியது. அப்படியான வயிரவருக்கு வாய்த்த நாயாக அருகே ஆறடித் தென்னை மரம் ஒன்று தலைதாழ்த்தி சாமரம் வீசுவது மேலும் ஒரு சிறப்பான காட்சி.

ஒரு தலை சிறந்த இனமான தமிழ் இனத்தில் ‘ஒரு பெண்ணே கையில் இருந்த புடைக்கும் சுளகால் பாய்ந்து வந்த சிறுத்தைப் புலியை விரட்டினாள்’ எனச் சங்கப் புலவன் பாடினான். யானையை ஒரு தமிழீழப் பெண் அடித்து விரட்டியதாக ஆனை அடித்த அரியாத்தை என்கிற ஈழத்து நாட்டார் கதையையும், பாரம்பரியமாகக் கொண்டிருந்த இனத்தில், இப்படியான அவமானச் சின்னங்களா? என்கிற கேள்விகள் அவனை துளைத்து எடுக்கின்றன.

வேதனை நிறைந்த வேடிக்கை என்னவென்றால்? தள்ளாத வயதிலும் தலைவராகும் ஆசை. தானாகவும் போகாமல், தள்ளினாலும் போகாமல் தமிழினத்தின் சாபக் கேடாக, அவமானச்

சின்னமாக இருக்க அவருக்கு என்ன அப்படி ஒரு தீராத பதவி மோகமா? என்கிற கேள்வியும் இந்தப் படத்தில் சம்பந்தனின் பணிவும், கோட்டாவின் கேலிச் சிரிப்பும் உலகத்துக்குச் சொல்ல விளையும் செய்திகள் என்ன? என்கிற கேள்வியும் எழுகின்றன.



இப்படியான தலைவர்களே சே(று)ர் பொன்னம்பலம், இராமநாதன் தொடக்கம் இரா.சம்பந்தன் வரை மட்டும் அல்ல, அடுத்த வரிசைத் தலைவர்களான மாவை போன்றோரையும் எமது இனம் தனது தலையில் கட்டி அழும் அவலம் தெரிகிறது.

இன்று பல மக்கள் போராட்டங்களை, வருடக் கணக்கில் கடந்த 10 வருடங்களாக முன்னின்று தலைமை தாங்கி நடத்திவரும் பெண்கள் பலர், இன்று நம்மிடையே இருக்கும் பொழுது இப்படியான பேடிகளைத் தலைமையாக தமிழினம் வைத்திருப்பதை உடனடியாக தடுத்து நிறுத்திப் போராட்டங்களை தலைமை தாங்கிப் போராடி வரும் பெண்களைத் தமிழினத்தின் தலைவர்களாக நியமிப்போம்.

1960ல் சிங்களப் பெண்களான ஸ்ரீமாவோவும், 1990ல் சந்திரிகாவும் சிங்களத்தின் அரசியல் தலைமையை ஏற்றிருக்காவிட்டால், சிங்களம் இன்று இப்படியான பலத்துடன் விளங்க முடியுமா? இனியாவது ஈழத் தமிழ் இனம் இப்படியான கேள்வியைக் கேட்டால், தவறாமல் தமிழினம் பெண்களின் தலைமைத்துவத்தை கையில் எடுத்து, இழந்த பெருமைகளை மீட்டுவிட முடியும்.

**நடக்குமா? தமிழினமே நினைத்துப் பார் !**




# தாயுமானவள்

லட்சுமி தூங்குவது போலவே படுக்க வைக்கப்பட்டிருந்தாள். அவளது தலைமாட்டுப் பகுதியில் இருந்து அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் மதி.

மதி சத்தம் போட்டு அழவில்லை. ஆனால், அவள் கண்ணில் இருந்து தாரைத் தாரையாக கண்ணீரும் வடிந்தபடியே இருந்தது. மதிக்கு லட்சுமி அம்மாவாக வந்து பதினைந்து வருடங்களுக்கும் மேலாகின்றது. இதுவரை ஒரு நாள்கூட நேரடியாக 'அம்மா' என்று அழைத்தது கிடையாது. ஆனால் அந்த வீட்டுக்கு மதிக்கு லட்சுமி அம்மாவாக வந்த நாளிலிருந்து ஒரு நாளைக்கு நூறு தடவைக்கு மேல் 'மகளே! மகளே!!' என்றே அழைத்துக் கொள்வாள்.

மதி பிறந்த சில நிமிடங்களிலேயே மதியின் தாய் தேவகியும் இறந்து விட்டாள். பத்து வயதுவரை தந்தை தியாகுதான் எல்லாமும்!. துணைக்கு தியாகுவின் தாயார் பார்வதியும் இருந்தாள். ஒருநாள் பார்வதியும் கண்ணை மூடிய பின்புதான் "இந்தப் பெண் பிள்ளையை எப்படி வளர்த்தெடுக்கப் போகின்றேன்?" என்ற கேள்வி தியாகுவின் முன் வந்து நின்றது.


தியாகு ஒருநாள் மதியை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு கேட்டார், "மதிக்குட்டிக்கு ஒரு அம்மா வேணுமா?" என்று.

மதியோ "வேணாம்ப்பா! நீயே போதும்" என்றாள்.

"இல்லைடா... அப்பாவுக்கு க்ஸ்றமா இருக்கு. பாட்டி இருக்கும் வரைக்கும் சமையல் பிரச்சனை இல்லாமல் இருந்தது. இப்ப பல நாளா உனக்கு நல்ல சாப்பாடு கூட இல்லை. வீட்டில சமையல் செய்யிறதுக்காவது ஒரு அம்மா வேணும் கண்ணு." என்று மதியிடம் கெஞ்சலாகக் கேட்டார் தியாகு.

ஏதோ விளங்கிக் கொண்டவள் போல மதி "சரி உங்க விருப்பப்படி செய்யுங்கப்பா" என்று சொல்லி விட்டு மடியை விட்டு இறங்கிப் போய்விட்டாள்.

அதற்கப்புறம் ஒரு மாதத்தில் நல்லூர் கந்தசாமி கோவிலில் வைத்துத் தாலிகட்டி, லட்சுமியை மதிக்கு அம்மாவாக அழைத்து வந்துவிட்டார் தியாகு.



லட்சுமி எதற்காக அந்த வீட்டுக்கு அழைத்து வரப்பட்டாளோ, அந்த வேலையை எந்தக் குறையுமின்றியே செய்தாள். மதிக்கு விருப்பமானதை சமைத்துக் கொடுப்பது...., விருப்பமான உடை உடுத்தி பாடசாலைக்கு அனுப்புவது மட்டுமல்ல மதியின் விருப்பத்திற்கேற்ப அவளின் அறையை அழகாக வைத்திருப்பதில் கூட கவனமெடுத்துக் கொள்வாள்.

மதி அது வேண்டுமா? இது வேண்டுமா? என ஒரு

நாளைக்கு நூறு தடவை மதி... மதி... எனக் கூப்பிட்டுக் கொள்வாள். ஆனால் மதியோ ஒரு நாள்;கூட அம்மா என்று அழைத்து, அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்டதே இல்லை.

இதை தியாகு கவனிக்காமல் இல்லை! ஒருநாள் மதியை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு "ஏண்டா கண்ணு நீ லட்சுமியை அம்மான்னு கூப்பிட மாத்டேங்கிற" என்ற போது, மதி தந்தையை நிமிர்ந்து பார்த்தாள். தந்தையின் முகத்தில் தெரிந்தது வேதனையா? அல்லது இயலாமையா? என்பதை அந்தக் குழந்தையால் புரிய முடியவில்லை!

அந்த முகவாட்டம் மதியின் மனதை அசைக்க, அன்றிலிருந்து லட்சுமியைப் பற்றிக் குறிப்பிடும் போது மட்டும் அம்மா என்று சொல்லத் தொடங்கினாள். ஆனால் நேரடியாக அம்மா என்று கூப்பிட்டதில்லை!

இத்தனைக்கும் லட்சுமி அவளிடம் ஒருநாள் கூட முகத்தைச் சுளித்ததில்லை! மதியைப் பொறுத்தவரை அப்பாவுக்கும், தனக்குமான உறவைப் பங்கு போட வந்த ஒருத்தி என்ற நினைப்பே அவள் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது.

முதலில் மதியின் போக்கு இருவரையும் சங்கடப்படுத்தினாலும் அவர்களும் அவளை விட்டுத்தான் பிடித்தார்கள்.

இப்பொழுது மதி வளர்ந்து பெரியவளாகி விட்டாள். இப்பொழுதும் மதி வீட்டில் தேவைக்கு மட்டுமே வாயைத் திறப்பாள்! அனேகமாக "ஆமாம்.... இல்லை...." என்ற வார்த்தைகள்தான் அவள் வாயில் இருந்து வெளிவரும்.

மதியின் கல்லூரித் தோழி கோகிலா அடிக்கடி மதியுடன் வீட்டுக்கு வரும்போது லட்சுமியை அம்மா அம்மா என்று கூப்பிடும் போது, லட்சுமி பூரித்துப் போவாள்!

மதி சேகர் என்ற பையனை விரும்புவதாக கோகிலா மூலமாக தெரிந்து




கொண்ட லட்சுமி, கணவன் தியாகுவின் காதில் மெதுவாகப் போட்டு வைத்தாள்.

ஒருநாள் மகளை அழைத்து மெதுவாக பேச்சை ஆரம்பித்தார் தியாகு. “மதி நான் விசாரிச்சுப் பார்த்தன்...”

“எதை விசாரிச்சார்? எதைப் பேசுகின்றார்?” எதுவும் புரியாமல் தந்தையைப் பார்த்தாள் மதி.

“பையன் நல்லவன் தானாம்! ஆனால் பெற்றார், உறவினர் என்று யாருமே இல்லாதது சங்கடமா இருக்கு... நம்ம வீட்டிலைதான் எனக்கும், லட்சுமிக்கும் யாருமே இல்லாமல் போய் விட்டார்கள். உனக்காவது சொந்த பந்தம் இருக்க வேணும் என்று ஆசைப் படுறேம்மா..” என்றார்.

மதிக்கு பெருத்த ஆச்சரியமாக இருந்தது. இந்த விடயம் அப்பாவிற்கு எப்படித் தெரிந்தது? என்று. இதுபற்றி எதுவுமே தெரியாததுபோல் வீட்டைச் சுத்தம் செய்துகொண்டிருந்த லட்சுமி சொன்னாள் “அதுக்காக மனதுக்குப் பிடிக்காத வாழ்க்கையை வாழ முடியுமா?” என்று.

மதியின் மனதில் ஏற்கனவே கனமாக சேகர் விழுந்திருந்தாலும், பதில் ஏதும் சொல்லாமல் வந்து கட்டிலில் படுத்துவிட்டாள். அப்பொழுது அவளின் தலையை வருடியது ஒரு மென்கரம். அது லட்சுமியினுடையது.

லட்சுமிக்கும் மதி வாய் திறந்து எந்தப் பதிலையையும் சொல்லவில்லை. ஆனால் அவளுடைய மௌனமான பார்வைக்குள் இருந்த ஏக்கத்தை பதிலாகப் பெற்று, கணவருடன் கதைத்து கல்யாணத்துக்குச் சம்மதம் வாங்கி விட்டாள்.

மதியின் திருமணமும் எந்த ஆடம்பரமும் இன்றி நல்லூர் கந்தசாமி கோவிலில் தான் நடைபெற்றது.

இப்பொழுது மதிக்கு பத்து வயதில் ஒரு பெண் குழந்தை இருக்கின்றது. வீடு எந்த நேரமும் கலகலவென பேச்சுச் சத்தமாகவே இருக்கும். மதி லட்சுமியுடன் பேசாமல் இருந்த காலங்களுக்கும் சேர்த்து, மதியின் குழந்தை லட்சுமியுடன் பேசிக்கொண்டே இருக்கும். மதி தன் கணவன் சேகருடன் கலகலவென பேசிக் கொண்டே இருப்பாள்.

அன்று காலையும் அப்படித்தான் செல்லமாக குழப்படி செய்து கொண்டிருந்த மதியின் குழந்தையைக் குளிப்பாட்டுவதற்காகக் குளியலறைக்கு அழைத்துச் சென்ற இடத்தில் வழுக்கி விழுந்ததில், தலையில் அடிபட்டுவிட்டது. விழும்போது “மதி” என்று கத்திக் கொண்டு தான் விழுந்தாள். மதியும் தன்னை மறந்து அம்மா என்று கத்திக் கொண்டு, குளியலறைக்குச் சென்று பார்த்ததில் தரையில் விழுந்து கிடந்தள் லட்சுமி!.

வாய் வார்த்தையாக எதுவும் வரவில்லை. கை மட்டும் மதியின் கரத்தைப் பிடித்து ஏதோ பேச வருவது போல் வாய் துடித்தது. அவ்வளவுதான் தலை சாய்ந்துவிட்டது.

நம்ப முடியவில்லை! முதலில் சாதாரண மயக்கம் என்றுதான் நினைத்தாள். கண் மூடி முழிப்பதற்குள் எல்லாம் முடிந்துவிட்டது.

நேற்று ராத்திரி அந்த சம்பவத்தைப் பார்த்த பிறகு தன்தவறை உணர்ந்த மதி, இன்று லட்சுமியை ஆசைதீர “அம்மா” என வாய் நிறையக் கூப்பிட வேண்டுமென காத்திருந்தவளுக்கு அவளின் மரணத்தின் பின்புதான் அம்மா என்று அழைக்கும் அந்தப் பாய்க்கியம் கிடைத்தது.

நேத்து ராத்திரி முன் இரவில் அறையில் குடி தண்ணீர் தீர்ந்துவிட்டது. சமையலறைக்கு சென்று எடுத்து வரலாமென்று போகும் போது, லட்சுமியின் அறையில் மின்விளக்கு எரிந்து கொண்டிருந்தது. மெல்லிய குரலில் பேச்சுக் குரலும் கேட்டது.

“இன்னுமா தூங்காமல் இருக்கின்றார்கள்” என்று எரிச்சலுடன் நடந்தவளின் காதில் பேச்சுக்குரல் கேட்டது.

“இப்படி ஒரு துரோகத்தை நான்

உனக்கு செய்திருக்கக் கூடாது” என்றது அப்பாவின் குரல்.

“துரோகமா? என்ன சொல்கின்றார்?” என்று நினைத்தபடியே நின்றுவிட்டாள் மதி. பேச்சு தொடர்ந்தது.

“என்னங்க நீங்க இதையே எத்தனை தடவைதான் சொல்லுவீங்க” இது லட்சுமியின் குரல்.

“நீ ஆயிரம் சமாதானம் சொன்னாலும்... உன்னைக் கல்யாணம் பண்ணிக்க நீ சம்மதம் சொன்னதும், நான் போட்ட முதல் கண்டிசன் நமக்கு ஒரே வாரிசுதான்... அது மதிதான்னு நான் சொன்னது.... அதுக்கு மறுப்பு எதுவும் சொல்லாமல் ஏற்றுகொண்டது மட்டுமில்லை, இதுவரை ஒரு நாளும் என் பக்கத்திலைகூட நீ வந்ததில்லை...”

“இப்ப அதிலை என்ன குறைஞ்சு போச்சு?.”

“இல்லை லட்சுமி எனக்கு அப்புறம் உனக்கு யாரும் இல்லை... நீ மதியை பிள்ளையாத்தான் நினைக்கிறாய். ஆனால் அவ உன்னை அம்மாவா ஏத்துக்கலையே? அதுதான்...” புலம்பினார் தியாகு.

“யார் முன்னாலை போறது என்கிறது நம்ம கையிலா இருக்கு? நீங்க ஏன் மதிக்கு என் மீது பாசம் இல்லைன்னு நினைக்கிறீங்க?”

இதக் கேட்டுக் கொண்டிருந்த மதியின் கண்களில் மாலை மாலையாக கண்ணீர் வழிந்து ஓடியது. நான் எவ்வளவு சுயநலக்காரியாக இருந்துவிட்டேன் என நினைத்துத் துடித்தவள் நாளைக்கு விடிந்ததும் முதலில் அம்மா என்று அழைத்து, லட்சுமியின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டும். அம்மாவை ஆச்சரியத்தில் ஆழ்த்த வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

ஆனால் நடந்தது லட்சுமி இறந்த பின்தான் அவளை அம்மா என்று அழைத்துக் கொள்ள முடிந்தது.

லட்சுமி கொடுத்து வைத்தவள். தியாகு நினைத்தபடி அவள் அனாதையாகச் சாகவில்லை. சுமங்கலியாகவே இறந்திருக்கின்றாள். அம்மா என்று சொல்லி, கொள்ளி வைப்பதற்கு ஒரு மகள் இருக்கிறாள். நெய்ப் பந்தம் பிடிப்பதற்கு ஒரு பேரப்பிள்ளை இருக்கின்றது....

அவள் தாயுமானவள்.




# கொல்லும் கொரோனா

சண் தவராஜா



இன்றைய தேதியில் உலகைக் கலக்கிக் கொண்டிருக்கும் செய்தி கொரோனா வைரஸ். இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் போது 170 பேர் வரை இந்த வைரஸ் தாக்கத்தால் இறந்து விட்டதாகவும், உலகளாவிய ரீதியில் எண்ணாயிரம் பேர் வரை பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்த வைரஸ் தொற்று ஆரம்பிக்கப்பட்ட இடமான சீனாவின் வூகான் நகரத்தின் ஒரு கோடி 20 இலட்சம் மக்களுமே ஷகண்காணிக்கப்பட வேண்டிய நோயாளி’களாகப் பிரகடனம் செய்யப்பட்டு உள்ளனர். கடந்த வருடத்தின் இறுதி நாளில் கண்டறியப்பட்ட இந்த வைரஸ் தாக்கம், வூகான் மாகாணத்தோடு ஏதோவொரு வகையில் தொடர்பில் இருந்த நபர்கள் ஊடாக யேர்மனி, பிரான்ஸ், அமெரிக்கா என மேலும் 20 நாடுகளில் பரவி உள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ள நிலையில், உலக சுகாதார நிறுவனம் சர்வதேச சுகாதார நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்துள்ளது.



2003 ஆம் ஆண்டில், இதேபோன்று சீனாவில் ஆரம்பித்து 17 நாடுகளில் பரவி 774 பேரின் மரணத்திற்குக் காரணமாக இருந்த சார்ஸ் வைரஸை ஒத்ததாக இந்தக் கொரோனா வைரஸும் உள்ளது. சுவாசத்தின் ஊடகவே பரவக் கூடிய தன்மை கொண்ட இந்த வைரஸ் வெளவாலில் இருந்து அதனை உண்ட பாம்புகளிடம் வந்து, பாம்புகளை உண்ட மனிதர்களிடம் தொற்றியிருக்கலாம் எனச் சொல்லப் படுகின்றது. பாம்புப் பிரியர்களான சீனர்களிடம் இந்த நோய் தொற்றியதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

ஆரம்பத்தில் சிறிது அலட்சியமாக நடந்து கொண்ட போதிலும், தொடர்ந்து சுறுசுறுப்படைந்த சீன அரசாங்கம் கொரோனா வைரஸுக்கு எதிரான போராட்டத்தைத் தீவிரப் படுத்தியுள்ளது.



நோய்த் தாக்கத்தைக் குறைக்கும் நோக்கிலான ஆராய்ச்சிகளும் முடுக்கிவிடப் பட்டுள்ளன. இதேவேளை, அவுஸ்திரேலிய விஞ்ஞானிகளும் கொரோனா வைரஸை உருவாக்கி உள்ளதாக அறிவித்துள்ளனர். கொரோனா போன்ற வைரஸ்களை ஒழிக்க இதுவரை மருந்துகள் கண்டறியப்படாது விட்டாலும், அவற்றின் பாதிப்புக்களைக் குறைக்க, அவற்றால் ஏற்படும் மரணங்களைத் தடுக்க விரைவில் மருந்து கண்டுபிடிக்கப்படும் என நம்பலாம்.

நோய்ப் பரவலை விட அதனால் உருவாக்கப்படும் அச்சமூட்டல் செயற்பாடுகளே அதிகமாக உள்ளதாக சீனா தெரிவித்துள்ளது. பொதுவாக உலகில் ஆண்டுதோறும் காசநோயால் மாத்திரம் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இறக்கின்றனர். உலக மக்கள்தொகையில் மூன்றில் ஒருவர் இந்த நோயின் தொற்றுக்கு ஆளாகி உள்ளனர். கிட்டத்தட்ட காசநோயால் இறப்போரின் எண்ணிக்கை அளவில் மலேரியாத் தொற்றாலும் மக்கள் இறந்து வருகின்றனர். எய்ட்ஸ் நோயால் கடந்த வருடத்தில் மட்டும் 5 இலட்சத்திற்கும் அதிகமானோர் உலகளாவிய ரீதியில் மரணத்தைச் சந்தித்துள்ளனர்.




இன்றைய காலகட்டத்தில் மிகப்பெரும் உயிர்க்கொல்லி நோய்களாக விளங்கும் இருதய நோய், பக்கவாதம், புற்றுநோய், மூளைப் பாதிப்பு நோய் என்பவற்றால் மரணமடைவோரின் எண்ணிக்கை இவற்றை விடவும் பல மடங்கு அதிகமானது. ஆனால், சமூக ஊடகங்கள் மலிந்துள்ள இன்றைய உலகில் செய்திகளை விடவும் வதந்திகள் அதிகமாகப் பரப்பப்பட்டு மக்கள் மத்தியில் பதற்றமும் பீதியும் அதிகரிக்கச் செய்யப் படுகின்றன. அது மாத்திரமன்றி, பன்னாட்டு ஊடகங்களை அதிகம் கையில் வைத்திருக்கும் மேற்குலகின் விருப்பு'க்கு மாறான நாடுகள் சம்பந்தப் படும்போது சற்று அதிகமாகவே செய்திகளுக்கு முக்கியத்துவம்' தரப்படுவதையும் அவதானிக்கலாம்.

இந்த வேளையிலே, இஸ்ரேலிய விஞ்ஞானி ஒருவர் வெளியிட்ட தகவல் கவனத்தை ஈர்த்துள்ளது. சீனாவின் வூகான் மாகாணத்திலேயே உயிரியல் ஆயுதங்களைத் தயாரிக்கும் பரிசோதனைச் சாலை இருக்கிறது. அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது ஏற்பட்ட தவறுதல் காரணமாகவே கோரோனா வைரஸ் வெளியே பரவியிருக்கக் கூடும் என்பது அவரது வாதம். வழக்கம்போல் ஆதாரம் எதுவும் இல்லாத தகவல்தான் இதுவென்று புறம்தள்ள முடியாத கோணம் ஒன்றும் இதில் உள்ளது.

இன்றைய நிலையில் வல்லரசுகள் பலவும் உயிரியல் ஆயுதம் தயாரிக்கும் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றமை ஒன்றும் இரகசியமான விடயமல்ல. இஸ்ரேலிய விஞ்ஞானி சொல்வதைப் போன்று சீனப் பரிசோதனைச் சாலையில் இருந்தும் இந்த வைரஸ் புறப்பட்டு இருக்கலாம். அல்லது வேறு நாடு கூட சீனாவுக்கு எதிராக இந்த வைரஸைப் பரவவிட்டு சீனாவைப் பழிவாங்க முயற்சித்தும் இருக்கலாம்.

*2003 இல் சீனாவில் சார்ஸ் வைரஸ்* பரவிய வேளை, சீனாவுக்கு 500 பில்லியன்




டொலர் பெறுமதியான இழப்பு ஏற்பட்டது. 17 வருடங்களில் சீனாவின் பொருளாதாரம் தற்போது பல மடங்கு வளர்ந்துவிட்டது. தற்போதைய மதிப்பீடுகளின் அடிப்படையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இந்த வருடத்தின் முதல் காலாண்டில் சீனாவின் உற்நாட்டு மொத்த வருமான வளர்ச்சியில் ஒரு வீத இழப்பு ஏற்படும் என மதிப்பிடப் பட்டிருக்கின்றது.

சீனாவுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே உலகின் முதலாவது பெரிய பொருளாதார நாடு எது என்பதில் போட்டா போட்டி நடைபெற்றுவரும் நிலையில் சீனாவின் பொருளாதார வீழ்ச்சியால் நன்மையடையப் போவது, அல்லது மகிழ்ச்சி கொள்ளப் போவது யார் என்பது தெள்ளத் தெளிவாகின்றது. சிந்திக்கக் கூடியவர்கள் இந்தக் கோணத்திலும் சிந்திக்கலாம்.

ஆனால், எம்மவர்கள் சிலரின் சிந்தனையோ நாம் 21 ஆம் நூற்றாண்டில் தான் வாழ்கின்றோமா என்ற ஐயத்தைத் தோற்றுவிக்கும் வகையில் உள்ளது. பவள மல்லிச் சாறு, ரசம் என்பவற்றைச் சாப்பிட்டால் கொரோனா வைரஸில் இருந்து சுகம் பெறலாம், அகத்தியர் காலத்திலேயே இந்த வைரஸைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். சிலப்பதிகாரத்தில் கூட இதுபற்றிச் சொல்லப்பட்டுள்ளது என ஏகத்திற்குக் கற்பனைக் குதிரைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றனர். தம்மை அறிவாளிகள்(?) மேதாவிகள் எனக் கூறிக் கொள்ளும் ஒரு கூட்டத்தினர் இத்தகைய செய்திகளை சமூக ஊடகங்களில் பகிர்வதோடு 'பச்சைத் தமிழனாக இருந்தால், உண்மையான தமிழனாக இருந்தால் இந்தச் செய்தியைப் பகிர்' என்று எச்சரிக்கை செய்து எம்மை இரத்தப் பரிசோதனை செய்யத் தூண்டி வருகின்றனர். ஆனால், இதுவரை யாரும் அருகில் உள்ள சீனத் தூதரகத்திற்குச் சென்று தம்மை இனங்காட்டி, தமது அறிவுத் திறமையை(?) நிரூபிக்க முன்வரவில்லை.

இன்றைய நிலையில் கொரோனா வைரஸுக்கு விஞ்ஞானிகள் மருந்து கண்டுபிடிக்க வேண்டியது ஒருபுறம் இருக்க ஒருசில தமிழ் அறிவாளிகளில் தலைகளில் மூளை இருக்கிறதா என்ற ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டியதும் அவசிமாகின்றது.


CENTURY
TRAVELS GMBH
Sommer 2020
Frankfurt-München
Colombo
inklusive
Steuern und
Gebühren
ab 599€
Buchen Sie schnell und
Sichern Sie Ihre Platz
Rheinische Strasse 29
44137 Dortmund
Fon : 0231 5574 319
Fon : 0231 5896 557
Mob : 017621682149

# Radio - by - Phone

16ஆம் ஆண்டில்...

ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி

தொலைபேசி இலக்கத்தில்

ஐரோப்பியத் தமிழ் வானொலி

அழையுங்கள்! வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற அழையுங்கள்

**00 49 231 700 977 60**

0221 9888014

01 80140659

044 5133032

0330 332 6349

0787 72527

6474969717

5149003078

7167480305

0280725194

மேலதிக விபரங்களுக்கு... **www.etr.fm**